
# Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு12 தொகுதி 2 ஏப்ரல் - ஜூன் 2022

**R5483**

## ஊழியத்தின் வெகுமதி மேன்மை

## GREATNESS THE REWARD OF SERVICE

**ஆதார வசனங்கள் : மாற்கு 10:32–45**

**திறவுகோல் வசனம் : மாற்கு 10:45** “மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்”

இயேசுவின் ஊழியத்தின் முடிவில் இந்த உரையாடல் நிகழ்ந்தது. மூன்று வருடங்களுக்கும் மேலாக போதகர் தம் சீஷர்களை அழைத்து, அவர்களுக்கு அறிவுறுத்திக்கொண்டிருந்தார். அவர்கள் அவரை மேசியாவாக, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்திற்கும் சுதந்தரவாளியாக, மரித்தவர்களும் உயிரோடிருக்கிறவர்களுமாகிய உலக மனுக்குலம் அனைத்தையும் ஆசீர்வதிக்கிற மேசியாவின் இராஜ்ஜியத்தை ஏற்படுத்துகிற ஒருவராக அவரை அடையாளங் கண்டுகொண்டனர்.

அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால், அவருடைய சிங்காசனத்தில் அவரோடுகூட அவர்கள் உட்காருவார்கள் என்று நம் போதகர் குறிப்பாக அவர்களுக்கு உறுதியளித்திருந்தார். இருப்பினும் அவருடைய இராஜ்ஜியம் ஆவிக்குரிய ஒன்றாக இருக்கும் என்றும், அதில் அவர்கள் பங்குபெறுவதற்கு முன் அவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலின் மாற்றத்தை அடைந்திருப்பது அவசியமாயிருக்கும் என்றும் அவர்களிடத்தில் கூறியிருக்கவில்லை. இராஜ்ஜியத்தில் அவர்கள் பங்குபெறுவதற்கும், அந்த இராஜ்ஜியம் மனுஷர் மத்தியில் ஸ்தாபிக்கப்படுவதற்கும் முன்பாக, ஒரு யுகத்தின் குறுக்கீடு இருக்கும் என்ற உண்மையை அவர்களுக்கு அப்போது அவர் தெளிவுபடுத்தவில்லை. ஆனால் இவை எல்லாவற்றையும் சூசகமாக காட்டியிருந்தார். “இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்கு சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்போது தாங்க மாட்டீர்கள். எனினும் சத்தியஆவி வரும்போது, அது என்னுடைய வார்த்தைகளை உங்கள் நினைவிற்கு கொண்டுவந்து, வரப்போகிற காரியங்களைப் பற்றி உங்களுக்கு அறிவிக்கும்” என்று கூறியிருந்தார்.

இருப்பினும், சீஷர்கள் அறிந்துகொண்டு மதிப்புணர்ந்து போற்றுவதற்குத் தேவையான செய்திகளின் ஒரு பகுதியை அவர்களுக்கு இயேசு வெளிப்படுத்த ஆரம்பித்தார், இல்லாவிடில், அவர்கள் முற்றிலும் மேற்கொள்ளப்பட்டு, சோர்வடைவர். அவர் தாம் எருசலேமிற்கு போகப் போவதாகவும், அதன் விளைவாக தாம் புறஜாதிகளின் கையில் சிலுவையில் அறையப்பட ஒப்புக்கொடுக்கப்பட நேரிடும் என்றும் அவர்களுக்குக் கூறினார். எப்போதும் தைரியசாலியாக இருக்கும் பரி.பேதுரு, இச்சமயம் தன்னை ஒரு கடுமையான கண்டனத்துக்கு உட்படுத்தினார். அவர் போதகரை சரிசெய்யும்படி தீர்மானித்து, நீர் எங்களுக்கு உண்மையைச் சொல்லவில்லை. இவைகள் உமக்கு நேரிடக்கூடாது; நீர் எங்களுக்கு கூறியவைகள் எங்களை சோர்வடையவே செய்யும், நான் அறிக்கை பண்ணினதைப்போல நீர் மாபெரும் மேசியாவாக இருக்கிறீர். நீர் ஆளுகை செய்யவேண்டும். நீர் ஒருபோதும் சிலுவையிலறையப்படக் கூடாது. அன்பு போதகரே இந்த சிந்தையை விட்டுவிடுங்கள். நீங்கள் விரைவில் அறிமுகப்படுத்த இருக்கிறதும், உம்முடைய உண்மையுள்ள சீஷர்களாக நாங்கள் விரைவில் பங்குபெற இருக்கிறதுமான

### இம்மாத வெளியீட்டில்


.. **ஊழியத்தின் வெகுமதி மேன்மை** ... 1

.. **குருடனான பர்திமேயு பார்த்தது என்ன** ... 6

.. ***தற்கால சத்தியத்தில் நமது பொறுப்பு*** ... 11

.. ***பெரிய மேய்ப்பனும் அவரது ஆடுகளும்*** ... 14



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

இராஜ்ஜியத்தின் மகிமையான காரியங்களைக் குறித்தே தொடர்ந்து சிந்திப்போம்'' என்று கூறினார்.

ஆனால் இயேசுவோ பரிசுத்த பேதுருவைக் கண்டித்து, ''எனக்கு பின்னாகப் போ, சாத்தானே, தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளை சிந்திக்கிறாய்'' என்றார்.

தற்போது, இந்த பாடத்தில் இயேசு, அதே பிரயாணத்தில் அவருக்கு வரவிருக்கும் அவமானம், கொடுமை, மரணம் ஆகியவற்றை மறுபடியும் அவர்களிடத்தில் எடுத்துரைத்தார். இந்த சமயம், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கிற தம் உயிர்த்தெழுதலைக் குறித்த சிந்தையையும் இணைத்திருந்தார். இருப்பினும் அந்தக் காரியம் சீஷர்களால் உணரப்படாதிருந்தது. இது மிகவும் இரகசியங்களாக காணப்படுகிற போதகரின் கருகலான காரியங்களில் ஒன்று என அவர்கள் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டனர். ''மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை'' என்று ஒரு சந்தர்ப்பத்தில் நமக்கு எப்படி சொன்னார் என்பதை நினைவுபடுத்திப் பாருங்கள் , அது கருகலான காரியமாயிருந்தது, அதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. அப்போது, நாம் இந்த வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளவில்லை, இப்போதும் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும், நாம் அதைப் பற்றிப் பிடித்திருக்கிறோம். இதேபோன்ற மற்றுமொரு அறிக்கையை இங்கு நாம் பெறுகிறோம்: மிக கொடுமையான குற்றவாளிகளுக்கு வைக்கப்பட்டுள்ள தண்டனையை – சிலுவையில் அறைதலை பெறப்போவதாக தம்மைக் குறித்து போதகர் குறிப்பிடுகிறார் என்றனர்.

போதகரின் வார்த்தைகளின் அர்த்தத்தை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் என்ன எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களோ அதிலிருந்து இந்தக் கருத்துக்கள் மிகவும் வேறுபட்டதாக காணப்பட்டது. எப்படி அவர்களால் அதை ஏற்றுக்கொள்ளமுடியும் ? இயேசு அவர்களுக்கு கூறியவற்றையும் அந்த சூழ்நிலையின் புரிந்துகொள்ளுதலையும் பெந்தெகொஸ்தே நாள்வரை அவர்கள் பெறவில்லை. அங்கு பரிசுத்தஆவி தெய்வீக ஏற்பாட்டை தெளிவுபடுத்தத் துவங்கியது, அதாவது, இராஜ்ஜியத்தின் மகிமைகள் வெளிப்படுத்தப்படுவதற்கு முன்பாகவும், உலகத்திற்கான ஆசீர்வாதங்கள் துவங்குவதற்கு முன்பாகவும் முழு சபையின் பாடுபடுதல் முந்திவரவேண்டும் என்பதை தெளிவுபடுத்தத் துவங்கியது.

### வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும்

யாக்கோபு மற்றும் யோவானின் தாய் அவர்களுடன் வந்து அவர்களுக்காக அவர்களின் வேண்டுதலை முன்மொழிந்தார் என்று மற்றொரு சுவிசேஷம் நமக்குச் சொல்கிறது. இராஜ்ஜியத்தின் மேன்மைகளை பகிர்ந்தளிப்பதற்கான நேரம் மிக சமீபித்திருக்கிறது என அவர்கள் நம்பினார்கள். பிரதானமான ஸ்தானங்களுக்காக பேச விரும்பினார்கள். இந்த இரண்டு அன்பிற்குரிய சீஷர்கள் போதகருக்கு அருகிலான அந்த இடங்களை பேராவலின் நிமித்தமாக மாத்திரமே தேடினார்கள் என்று நாம் கருதத் தேவையில்லை. மாறாக அவர்கள் கர்த்தரை மிகவும் நேசித்தார்கள் என்று கருதுவோமாக! இதனிமித்தமாக, கர்த்தருக்குஅருகில் இருப்பதை மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக அவர்களால் உணரமுடிந்தது என்று எண்ணவேண்டும். நிச்சயமாகவே, போதகருடைய பாடுகள் மற்றும் ஆழமான அனுபவங்களின் நேரங்களில் அவருடன் அருகில் இருக்கிறதை அவர்கள் தெளிவாக மதித்துணர்ந்திருந்தனர். பன்னிருவர்களில் பெரும்பான்மையானவர்களைவிட, அருகில் வருவதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பல்வேறு விசேஷித்த தருணங்களில் இதே யாக்கோபு, யோவான் மற்றும் பேதுருவை கர்த்தர் தம்முடன் அழைத்துச்சென்றார். அவர்கள் பரிசுத்த மலையிலும், யவீருவின் மகளை உயிர்த்தெழுப்பும்போதும், கெத்செமனே தோட்டத்திலும் அவரோடு இருந்தனர். அவர்கள் கர்த்தரால் பெரிதும் நேசிக்கப்பட்ட மகிமை நிறைந்த குணங்களை உடையோராயிருந்தனர்.

இயேசுவின் வார்த்தைகளை நாம் கவனமாக அடையாளங் காண்போமாக. அப்படி அமருவதற்கு எந்த ஒரு சிங்காசனமும் இல்லை என்று தம் சீஷர்களிடத்தில் அவர் சொல்லவில்லை. ஆனால் அதற்கு மாறாக, அங்கே சிங்காசனம் இருக்கும் அதேவேளையில், அந்த சிங்காசனத்தில் முன்னுரிமைகளுக்கான இடங்கள் இருக்கிறது என்றும், அதைப் பகிர்ந்தளிப்பது என்னிடத்தில் அல்ல, பிதாவினிடத்திலேயே இருக்கிறது என்றும் கூறினார்.

இயேசு இரக்கம், பொறுமை, மன்னிப்பு ஆகியவற்றின் பிரதிநிதியாக இருக்கும் அதேவேளையில், பிதாவானவர் துல்லியமான நீதியின் பிரதிநிதியாக நிற்கிறார். ஆயிரவருட இராஜ்ஜியத்தின் ஸ்தானங்களானது, இரக்கம் அல்லது தனிப்பற்றின் அளவின்படி தரப்படுவதில்லை. மாறாக, முற்றிலும் பண்பின் அளவின்படியே தரப்படுகிறது. கர்த்தராகிய இயேசு தாமே மிக உயர்ந்த ஸ்தானத்தைப்

பெறுவார், ஏனெனில் அதற்கு அவர் தகுதிவாய்ந்தவராக இருக்கிறார். “அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும்பெற்றுக்கொள்ள பாத்திரராய் இருக்கிறார்”, பிதாவானவர் இயேசுவுக்கு வாக்களித்தது போல, இவைகளை அவருக்கு தருவார். இந்த இராஜ்ஜியத்தின் மகிமையானது, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை, முதலாம் உயிர்த்தெழுதலின் மாற்றத்தினால் நிறைவடையும்வரை இன்னும் காத்திருக்கவேண்டும் என்றபோதிலும், அவர் நம் கர்த்தருக்கு கனத்தையும், மாபெரும் மகிமையையும் தந்திருக்கிறார்.

### இராஜ்ஜியம் எதை அர்த்தப்படுத்துகிறது ?

இயேசுவினாலும் அப்போஸ்தலர்களினாலும் மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டதும், இந்தப் பாடத்தின் அடிப்படையாயிருக்கிறதுமான மேசியாவின் இராஜ்ஜியம் குறித்து, கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியில் பல நூற்றாண்டுகளாக குழப்பம் நிலவிவருகிறது. ஆரம்பத்தில் எந்த குழப்பமும் இல்லை, இயேசுவின் நாட்களுக்குப்பிறகு கிட்டத்தட்ட 200ஆண்டுகள் வரையிலும் எந்த குழப்பமும் இல்லை. மேசியா இரண்டாம் முறை வந்து, தம்முடன் சபையை மகிமையில் ஏற்றுக்கொண்டு, உலகத்தை ஆட்சிசெய்வதற்காக தெய்வீக வல்லமையின் இராஜ்ஜியத்தை ஸ்தாபித்து, எல்லாவற்றையும் தேவனுடைய சித்தத்துக்கு கீழ்ப்படுத்துவார் என்ற வாக்குத்தத்தத்தை ஆரம்பகால சபையானது நன்கு புரிந்துகொண்டிருந்தது. இந்த மேசியாவின் இராஜ்ஜியம் அதன் பணியை நிறைவேற்றி முடிக்க ஆயிரம் ஆண்டுகள் தேவைப்படும் என்றும் புரிந்துகொண்டது. ஆனால் மேசியாவின் இராஜ்ஜியமாக சபை ஏற்படுத்தப்பட்டு, இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன்னதாகவே அது உலகத்தை ஜெயங்கொள்ளவேண்டும் என்ற முடிவைத்தருகிற ஒரு கோட்பாடு பரவிவந்தது.

இந்த வேத ஆதாரமற்ற பார்வை, சபை வரலாற்றின் முழு செயல்முறையையும் மாற்றியது. கேட்கிற காதும் மதிப்புணர்ந்து போற்றுகிற இருதயமும் கொண்ட சில பரிசுத்தவான்களை அழைத்து, பூரணப்படுத்தவும், அவர்கள் இராஜ்ஜியத்தின் கனம் மற்றும் மகிமைக்கு தயார்ப்–படுத்துவதற்கான கண்ணோட்டத்துடன் மாத்திரமே சுவிசேஷம் நீண்டநாட்களாக பிரசங்கிக்கப்பட்டு வருகிறது, அதற்கு பதிலாக, அதன் நடைமுறை மாற்றப்படாது. அதன்பிறகு சமுதாய ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சியே இருந்தது. சதியாலோசனை துவங்கியது. தவறான உரிமைகோரல்கள் வலியுறுத்தப்பட்டது. மேலும் மூடநம்பிக்கையின் வழியாக, இராஜாக்கள் மற்றும் தேசங்களை கட்டுப்படுத்தி அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. கூடுதலாக துன்புறுத்துதல்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன. சபையின் உலகளாவிய ஆதிக்கத்தை நிறுவும் நோக்கத்திற்காக, சபை அமைப்பின் கருவிகளாக இருப்பதற்கு சமுதாய ஆட்சியாளர்கள் முடிந்தவரை புகழ்ந்துபேசி வசப்படுத்தப்பட்டனர், பயமுறுத்தப்பட்டனர், தூண்டப்பட்டனர்.

குறிப்பிட்ட காலத்திற்கு, நீதிவிசாரணை போன்றவற்றின் மூலம், இந்தக் காரியங்கள் தழைத்தோங்கியது. ஆனால் 1799லிருந்து, உலகத்தின் மீதான சபை அமைப்பின் ஆதிக்கத்தின் எல்லாக் கருத்தும் விலகியது. அவர்களுடைய குழப்பத்தில், அநேகர் மேசியாவின் இராஜ்ஜியத்தில் வைத்திருந்த நம்பிக்கைகள் எல்லாவற்றையும் இழந்திருந்தார்கள். சிலரே அதை கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது எதிர்பார்த்தனர். விசுவாசிகளின் இருதயங்களில் ஒரு ஆவிக்குரிய இராஜ்ஜியத்தைப் பற்றிய குழப்பத்தில் அநேகர் ஆலோசித்தனர். மற்றவர்கள், கிறிஸ்துவின் இராஜ்ஜியம் தற்போது, உலகத்தின் மாபெரும் அரசாங்கங்களில் குறிப்பிடப்படுகிறது என நம்புகிறார்கள். எனினும், மேசியா இராஜ்ஜியத்தின் குறிப்பிட்ட பகுதிகள், அதே இராஜ்ஜியத்தின் மற்ற பகுதிகளை அழிக்க போர்க்கப்பல்களை கட்டுகிறதா என கேட்கும்போது, வெட்கி குழப்பமடைகிறார்கள்.

பெரும்பான்மையான கிறிஸ்தவ ஜனங்களால் வேதாகமத்தின் போதனை சீரற்றதாகவோ வாதப்பொருத்தமற்றதாகவோ கருதப்படுகிறது. இல்லையெனில், அங்கு ஒரு ஆட்சி செய்கிற இராஜ்ஜியம் இல்லாமல் புனித யாக்கோபு, புனித யோவான் மற்றும் மற்ற அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு சிங்காசனத்தின் மீது உட்காரமுடியாது என்பதை அவர்கள் பார்ப்பார்கள். “உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்ற கர்த்தரின் ஜெபத்துக்கு இசைவாக, இராஜ்ஜியம் எதிர்காலத்துக்குரியதாக இருக்கவேண்டும் என்பதைப் பார்ப்பார்கள். தேவனுடைய வார்த்தையை இரண்டகமான முறையில் கையாளுவதை நிறுத்துவதே நம் தேவையாக இருக்கிறது. நாம் வேதத்தை பயபக்தியுடன் படிப்பதற்கும், வசனங்களோடு வசனங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதன்மூலம் புரிந்துகொள்வதற்கும் கற்கவேண்டும். இப்படி செய்கிற வேத மாணாக்கர்கள் மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெறுகின்றனர். மேலும்

மேசியாவின் இராஜ்ஜியம் எதிர்காலத்துக்குரியது என்பதோடு, வெளிப்படையாகவே அருகில், அதாவது வாசற்படியில் இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறார்கள்.

### "என்னுடைய பாத்திரம் என்னுடைய ஞானஸ்நானம் – உங்களால் கூடுமா"?

இராஜ்ஜியத்தில் எஜமானுக்கு அருகிலான விசேஷித்த இடங்களுக்கு வேண்டுகோள் விடுத்த அந்த இரண்டு அன்புக்குரிய சீஷர்களுக்கு, இயேசு இராஜ்ஜியத்தில் உள்ள எந்த இடத்தையும் அடைய குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவது தேவை என்கிற உண்மையை அறியும்படி செய்தார். அவர்கள் சீஷத்துவத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள் என்பது மட்டும் போதாது. அவர்கள் கர்த்தரைப் பின்பற்றுவதற்காக எல்லாவற்றையும் அர்ப்பணித்தது மட்டும் போதாது. அவர்கள் அவருடன் இருந்திருக்கிறார்கள், அவருடைய போதனைகளைக் கேட்டிருக்கிறார்கள், அதைப் புரிந்துகொள்ள இயலுமளவுக்கு அதற்கு இணக்கம் காண்பித்திருக்கிறார்கள் என்பது மட்டும் போதாது, அங்கு அதைக்காட்டிலும் அதிகமானது ஏதோ இருக்கவேண்டும். இல்லையேல் அவர்கள் ஒருபோதும் இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கமுடியாது.

"நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா?" என்று சொல்லி, போதகர் இந்த நிபந்தனைகளை அறிவித்தார். அவர் எதை அர்த்தப்படுத்துகிறார்? பஸ்கா இராப்போஜனத்தை புசிப்பதற்கும், அங்கு அவர் ஏற்படுத்திய புளிப்பில்லா அப்பத்தில் பங்குகொண்டு நினைவுகூறுதலின் பாத்திரத்தில் பருகுவதற்கும் அவர்களால் கூடுமா? அல்லது மனதாயிருக்கிறார்களா? என்று அவர் அர்த்தப்படுத்துகிறாரா? அவர்கள் ஏற்கனவே அநேக நபர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் மறுபடியும் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதை இயேசு அர்த்தப்படுத்துகிறாரா? என் பாத்திரம் என் ஞானஸ்நானம் என்ற வார்த்தைகளின் நோக்கம் என்ன?

இயேசுவின் பாத்திரம் என்பது வேறொரு இடத்தில், "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ" என்று சொல்கிற பாத்திரம் என்று நாம் பதிலளிக்கிறோம். தெய்வீகத் திட்டத்தில் யார் பெரிய மேசியாவாக இருக்கப் போகிறார்களோ, உலகத்தை ஆசீர்வதிக்கிறதற்கான மேசியாவின் இராஜ்ஜியத்தின் மகிமை, கனம் மற்றும் வல்லமைகள் யாரிடத்தில் ஒப்படைக்கப்பட்டதோ, அவர்கள் அந்த கனத்திற்கும், மகிமைக்குமான தகுதியை நிருபிக்கவேண்டும். இயேசுவின் விஷயத்தில் அந்த பாத்திரம் இகழ்ச்சிக்குள்ளான அவமானத்தின் எல்லா அனுபவங்களையும், சிலுவை மரணத்தையும் சேர்த்து அர்த்தப்படுத்துகிறது. அது அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின் 31/2 வருடக் காலத்தில் அனுபவித்ததும், கல்வாரியில் "முடிந்தது" என்று அவர் கதறியபோது முழுமையாக நிறைவேற்றி முடித்ததுமான எல்லா அனுபவங்களையும் அர்த்தப்படுத்துகிறது.

அந்த பாத்திரத்தைப் பற்றி போதகர் தம் சீஷர்களிடத்தில்; "நீங்கள் எல்லாரும் இதில் பானம் பண்ணுங்கள்" என்று கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவோமானால், யாரெல்லாம் போதகருடன் அவருடைய இராஜ்ஜியத்தின் மகிமை, கனம், வல்லமையில் உடன் சுதந்திரராக ஆவதில் கிறிஸ்துவின் சீஷர்களாக வெற்றிபெற விரும்புகிறார்களோ அவர்கள் முதலில் ஆண்டவருடன் பாடுபடுவதைப் பொறுத்தவரையில், ஒரு உண்மைத்தன்மையை, பற்றுருதியை செயல்முறைப்–படுத்திக் காட்டவேண்டும். இயேசுவின் அடிச்சுவடுகளில் அவருடைய அன்பை, பற்றுருதியை, மரணபரியந்தமான உண்மைத்தன்மையை நிரூபித்துக் காட்டவேண்டும்.

தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு போதகர் எந்த குறிப்பும் தரவில்லை, ஆனால் மரணபரியந்தமான ஞானஸ்நானத்திற்கு கொடுத்திருக்கிறார். அதைப்பற்றி, சில நாட்களுக்குப்பிறகு அவர் பேசினார், "நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்" என்று கூறினார். போதகரது ஊழியத்தின் ஆரம்பத்தில் நிகழ்ந்த அவருடைய ஞானஸ்நானம், உண்மையான ஞானஸ்நானத்திற்கு ஒரு அடையாளமாக அல்லது உருவகப் படமாக மாத்திரமே இருந்தது. தண்ணீருக்குள் அவர் சென்று, அதில் அடக்கம் பண்ணப்பட்டது, அதிலிருந்து அவர் எழுந்தது ஆகியவை, அவர் மரணத்திற்குள்சென்று, மரணத்திலிருந்து அவர் உயிர்த்தெழுந்ததை அடையாளமாகக் குறிப்பிடுகிறது. மரணத்திற்குள்ளான அவருடைய உண்மையான ஞானஸ்நானம், யோர்தானிலிருந்து கல்வாரி வரை 31/2 வருடங்களுக்கு வளர்ச்சியடைந்ததாக இருந்தது. மேலும் சிலுவையில் "முடிந்தது" என்று சத்தமிட்டபோது, தம்முடைய மரணபரியந்தமான ஞானஸ்நானம் முழுமையடைந்தது என்று அவர் குறிப்பிடுகிறார். அந்த மரண ஞானஸ்நானத்திலிருந்து, பிதாவின் வல்லமையினால் மூன்றாம் நாளில் பிதாவின் வலது பாரிசத்திற்கு, அவர் எப்போதும் இடம் பெறப்போகிற ஸ்தானத்திற்கு எழுப்பப்பட்டார்.

இதுவே நம் போதகரின் ஞானஸ்நானம். இது

பூமிக்குரிய எல்லா உரிமைகளையும் முழுமையாக விட்டுவிடுவதைக் குறிக்கிறது. இப்போது அந்த அன்புக்குரிய சீஷர்களிடத்தில், இந்த எல்லைவரை அவரைப் பின்பற்ற அவர்கள் தயாராக இருக்கிறார்களா, அவர்களால் கூடுமா அல்லது விருப்பமிருக்கிறதா இல்லையா என்று கேட்டார்... அதாவது, அவருடைய அவமானமான பாத்திரத்தில், அவருடைய மரணபரியந்தமான ஞானஸ்நானத்தில் பங்குபெறுகிறவர்களாக இருக்கமுடியுமா என்று கேட்டார். அவரை உண்மையாய் பின்பற்றுவதனால் மாத்திரமே, இவ்வாறு அவருடைய இராஜ்ஜியத்தில் எந்த பங்கையும் வகிக்க அவர்கள் நம்பிக்கை கொள்ளலாம். இதே கொள்கை இயேசுவின் எல்லா பின்னடியார்களுக்கும் பொருத்தப்படவேண்டும். அவருடைய பாத்திரத்தில் நாம் பானம்பண்ணுவோமா இல்லையா என்பதும், அவருடைய மரணபரியந்தமான ஞானஸ்நானத்தில் பங்குபெறுவோமா இல்லையா என்பதும், நாம் ஒவ்வொருவரும் தீர்மானிக்கவேண்டியது. தாழ்மையானவர்களும், சுயத்தை பலிசெலுத்துகிறவர்களும் மாத்திரமே இப்படிப்பட்ட ஒரு அனுபவத்தை தாங்கிக்கொள்பவர்களாக அல்லது விருப்பமுள்ளோராக இருப்பார்கள்.

இப்போது நாம் இந்தக் கருத்துக்களை, அடிக்கடி நிகழ்கிற இராஜ்ஜியத்தைப் பற்றிய தவறான கண்ணோட்டங்களுக்கு பொருத்துவோம். இருதயத்தில் உள்ள தேவனுடைய எந்த இராஜ்ஜியத்திற்கும், இந்த உணர்வுகளை எப்படி பொருத்தமுடியும்? அல்லது அவைகளை பூமியின் பல்வேறுபட்ட இராஜ்ஜியங்களுக்கு எப்படி பொருத்தமுடியும், பூமியின் இராஜாக்கள் ஆட்சி செய்வதற்கு முன், அர்ப்பணிப்பின் மூலம், கிறிஸ்துவின் அவமானம் மற்றும் மரணபரியந்தமான பலியில் பங்குபெறுவது அவர்களுக்கு அவசியமா? அல்லது, சிலர் செய்கிறதுபோல, இந்த விஷயத்தை தற்கால சபை அமைப்பிற்குப் பொருத்தும்போது, கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்படுகிற பூமிக்குரிய அமைப்புக்களில் யாரேனும் அங்கத்தினராவது, மாபெரும் கஷ்டத்தின் மூலமாக நடக்கிறதா? இவைகளுக்குள் நுழைவதற்கு சுயத்தை சாகடித்தல் தேவைப்படுகிறதா? அவற்றில் உள்ள அனைவரும் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவோடுகூட அவரது மரணத்திற்குள் அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறார்களா? அவர்கள் அனைவரும் அவருடைய துன்பங்களின் பாத்திரத்தில் பங்குபெற்றிருக்கிறார்களா? நிச்சயமாக இல்லை. இராஜ்ஜியத்தைப் பற்றிய சரியான கண்ணோட்டம் மட்டுமே இந்த பல்வேறுபட்ட அறிக்கைகளுக்கான தீர்வாக இருக்கமுடியும். இராஜ்ஜியம் விலையுயர்ந்த முத்து என்பதை நாம் பார்க்கவேண்டும். அதை அடைய, மற்ற எல்லாவற்றையும் அர்ப்பணிக்கவேண்டும் – மத் 13:46.

### "நீங்கள் உண்மையாகவே செய்வீர்கள்" ...எங்களால் கூடும்

இந்த சம்பவத்தின் மற்றொரு பதிவில், அந்த சீஷர்கள் தங்களால் கூடும் என்று பதிலளித்தனர். அதாவது, போதகரின் பாத்திரத்திலும், அவருடைய ஞானஸ்நானத்திலும் பங்கு பெறுவதற்கு விரும்புகிறோம் என பதிலுரைத்தனர். நிச்சயமாக இவைகள் எல்லாம் எதை அர்த்தப்படுத்துகிறது என்று அவர்கள் தெளிவாக அறியவில்லை. ஆனாலும் அவர்கள், போதகர் கட்டளையிடும் எதையும் செய்வதற்கு இயலுகிறவர்களாக அல்லது விரும்புகிறவர்களாக, தயாராயிருந்தனர். அவ்வாறே அந்த உண்மையுள்ள அப்போஸ்தலர்களைப்போல, ஜெயங் கொள்ளுகிறவர்களாகவும், மணவாட்டி வகுப்பாராகிய இராஜ்ஜிய வகுப்பாருக்கு வாக்களிக்கப்பட்டுள்ள கனம், மகிமை, சாவாமையில் மீட்பருடன் பங்குபெறுகிறவர்கள் எல்லாரிடத்திலும் இது இருக்கவேண்டும்.

அந்த பதிவில் இயேசு, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் பெறுவீர்கள்" என்று பதிலளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது என்ன சொல்கிறதெனில், கர்த்தர் தம் சீஷர்களிடம் நியாயமாக எதிர்பார்க்கக் கூடியது எவ்வளவோ, அதை எல்லாரும் தர விருப்பமுள்ளவர்களாக இருக்கவேண்டும் . அவர் பெற்றிருந்த வல்லமையை நாம் பெறவில்லை, இயல்பாகவே நாம் பாவிகள். அவர் "பரிசுத்தரும் மாசற்றவரும், குற்றமற்றவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார்". எனவே நாம் சரியானதை மட்டுமே செய்ய மனதாயிருக்க வேண்டும். கர்த்தர் நம்மை அவருடைய பராமரிப்பின் கீழ் எடுத்து, துன்பம் மற்றும் அனுபவத்தின் பள்ளியில் நம்மை சேர்த்து, நம்முடைய விசுவாசத்தையும் மரணபரியந்தமான நம் உண்மைத்தன்மையையும் நிரூபிக்கிறதற்கு அவசியமான பாடங்களை நமக்குக் கொடுக்க நம்மை நடத்திச் செல்ல வேண்டியது அவசியம். விழுந்துபோன மனுக்குலத்தின் அங்கத்தினராக, நம் பெலவீனத்தின் நிமித்தமாக, நம்மால் எல்லாவற்றையும் செய்ய முடியாதிருந்தநிலையில், தேவன் தாம் நியமித்த இரட்சகரில், நமக்காக இதை வழங்கியிருக்கிறார் என்பது எவ்வளவு மகிமையாயிருக்கிறது! எவ்வளவு தெய்வீகத்தன்மை போன்றுள்ளது! அவருடைய பரிபூரணங்கள் நமக்கு சுமத்தப்படுவதாக எண்ணப்படுகிற அதே சமயம், நம்முடைய அபூரணங்கள் மீட்பர் மீது சுமத்தப்பட்டதாக எண்ணப்படுகிறது. இவ்வாறு, அவர்மூலமாக மாத்திரமே நாம் இராஜ்ஜியத்தையும், மகிமையையும், கனத்தையும்,

சாகாமையையும் ஆதாயமாக்குவோம் என்று நம்பிக்கை கொள்ளலாம்.

### முதன்மையான ஊழியக்காரர் .. மிகவும் கனப்படுத்தப்பட்டார்

பரிசுத்த யாக்கோபும் பரிசுத்த யோவானும் இப்படிப்பட்ட ஒரு வேண்டுகோளை வைத்ததற்காக, மற்ற அப்போஸ்தலர்கள் கோபமடைந்தனர். இருப்பினும், இந்த சம்பவம், மேசியாவின் இராஜ்ஜியத்தில் மேன்மையடைவதை குறித்து முறைப்படுத்தவேண்டிய விதிமுறைகளை கொடுப்பதற்கு இயேசுவுக்கு வாய்ப்பளித்தது. யார் ஒருவர் மற்றவர்களுக்கு அதிகமாக ஊழியம் செய்கிறாரோ, அதன்மூலம் அவர் ஒரு உயர்ந்த ஸ்தானத்திற்கான அதிகப்படியான தகுதியை தேவனுக்கு நிரூபிப்பவராக இருப்பார். இயேசு கூறியது போல், இது சில தன்னிச்சையான விதியின்படி செயல்படுத்தப்படும் ஒரு எஜமானியத்துவத்தின் சாதாரண நடைமுறை நடவடிக்கைகளிலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது.

யார் அதிகமாக ஊழியம் செய்கிறாரோ, அவரே மேலான கனத்தைப் பெறுவார் என்பது இராஜ்ஜியத்தின் விதியாக இருக்கிறது. இவ்வாறு இயேசு தாமே எல்லாரிலும் மிகச்சிறந்த ஊழியக்காரராக இருக்கிறார். அவருடைய ஸ்தானம், தெய்வீக நியமனத்தின்படி, இராஜ்ஜியத்தில் உயர்ந்த நிலைமையாக இருக்கிறது. மற்றவர்கள், அவர்கள் பெற்றுள்ள அவருடைய அன்பின் ஆவி, ஊழியம், கீழ்ப்படிதல் மற்றும் உண்மைத்தன்மைக்கேற்ப அவருக்கு அடுத்து வரிசைப்படுத்தப்படுவர்.

------------

R5484

# குருடனான பர்திமேயு பார்த்தது என்ன?

## WHAT BLIND BARTIMAEUS SAW

**ஆதார வசனங்கள் : மாற்கு 10:46–52**

**திறவுகோல் வசனம் : ஏசாயா 35:5,6**

“அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோகும். அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்”.

பஸ்கா வேளையாக அது இருந்தது, இயேசுவோடுகூட, அவர் பிரயாணிக்கும் திசையிலேயே அநேகர் எருசலேமை நோக்கி பிரயாணித்தனர். பர்திமேயு என்ற குருடனாயிருந்த ஒரு பிச்சைக்காரர், கடந்துசெல்பவர்களிடம் தர்மம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வழியருகே அமர்ந்திருந்தார். இயேசு கடந்துபோகும்போது, அசாதாரணமான சலசலப்பு ஏற்பட்டது. இதற்கான காரணம் என்னவென்று பர்திமேயு வினவினார். நசரேயனாகிய இயேசு தற்போதுதான் கடந்துபோனார் என்று பதிலுரைக்கப்பட்டது.

இயேசு புகழ்பெற்ற மேசியாவாயிருந்து, வேத வசனங்களின்படி பாவம், துக்கம் மற்றும் வலியை அகற்றி, முழு உலகையும் இறுதியில் ஆசீர்வதிப்பார் என்றும் பர்திமேயு கேள்விப்பட்டிருந்தார். இயேசு ஏற்கனவே குணப்படுத்தல்களை நிகழ்த்தியிருந்ததையும், நோயாளிகளது பிணி நீக்கியும், பிசாசுகளைத் துரத்தியும், குருடரின் கண்களை திறந்துமிருந்ததை அவர் கேள்விப்பட்டிருந்தார். இயேசு கடந்துபோனபோது ஏன் ஒருவரும் என்னிடத்தில் கூறவில்லை! என்று அவர் நினைத்தார். இயேசு மற்ற அநேகரை குணமாக்கியிருக்கிறாரே, அந்த தயை பெற்ற அநேகரில் நானும் ஒருவனாக இருக்கக்கூடாதா? என்று எண்ணினார்.

அவருடைய விசுவாசமும் நம்பிக்கையும் பற்றியெரிந்து, “இயேசுவே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்”(மாற்கு 1:47) என்று உரத்த சத்தமிட்டார். வழிப்போக்கர்களோ, “அமைதலாயிரு! மெதுவாக சத்தமிடு, மாபெரும் போதகரைத் தொந்தரவு செய்யாதே; அவர் மற்றவர்களோடு பேசிக்கொண்டிருக்கிறார் என்றனர். ஆனால் பர்திமேயுவோ, இப்பொழுது இல்லாவிடில் எப்பொழுதும் அவரிடத்தில் சேரமுடியாது என்று உணர்ந்தார். திரளான கூட்டத்தாருக்கு மேலாக தன் சத்தத்தை உயர்த்தி, எப்பொழுதுமிராத அளவுக்கு உரத்த சத்தமிட்டு, “இயேசுவே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்!” என்றார்.

இயேசு அந்த சத்தத்தைக் கேட்டார். இரக்கத்தைவேண்டி யார் கூப்பிட்டாலும், கிருபையளிப்பதற்கு எப்பொழுதும் தயாராக இருந்து, அந்த பார்வையற்ற மனிதரை தன்னிடத்தில் வரும்படி கட்டளையிட்டார். இக் கூக்குரலானது அவரது விசுவாசத்தை வெளிப்படுத்தி, திரளான கூட்டத்தாருக்கு முக்கியமான பாடமாய் அமைந்தது. மற்றவர்களது உதவியுடன், பர்திமேயு இறுதியாக, இயேசுவின் சமூகத்தில் தன்னைக் கண்டடைந்தார். “இயேசு அவனை நோக்கி; நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்று கேட்டார். “ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும்” என்று உடனடியாக பதில்

வந்தது. இயேசு அவரிடத்தில் ; “நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது” என்றார். உடனே அவர் பார்வையடைந்து,அவரைப் பின்செல்பவர்களின் கூட்டத்தில் தானும்ஒருவராக சேர்ந்துகொண்டு, இயேசுவைமேசியாவாக ஏற்றுக்கொண்டு, தெய்வீக வல்லமையை புகழ்ந்தார்.

### “இயேசுவே, தாவீதின் குமாரனே”

“இயேசுவே, தாவீதின் குமாரனே” என்ற பார்வையில்லாத அந்த மனிதரின் வார்த்தைகள், அவருக்கும் அவரது நாளில் ஜீவித்திருந்த யூதர்களுக்கும் விசேஷ முக்கியத்துவமுடையதாயிருந்தது. இன்றைய நாளில் ஜீவிக்கும் திரளான ஜனங்களைப் பொருத்தவரையில், இந்த வார்த்தைகள் முக்கியத்துவத்தை இழந்திருக்கின்றன. மகா பிரதான ஆசாரியராகிய மேசியா, குறிப்பிட்டளவுக்கு ஆரோனை முன்னடையாளமாக கொண்டிருந்தார், மாபெரும் நியாயப்பிரமாணிக்கராக மோசேயால் அடையாளமாக அல்லது உருவகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தார். தாவீதின் ஞானமும், ஐஸ்வரியமும், செல்வாக்குள்ள குமாரனாகவும், இராஜ்யத்தில் அவரது வாரிசாகவும் இருந்த சாலமோன் மூலம் மாபெரும் இராஜாவாக அடையாளப்படுத்தப்பட்டார், அல்லது உருவகமாகக் காண்பிக்கப்பட்டார் என்பதை யூதர்கள் அறிந்திருந்தனர். தீர்க்கதரிசனத்தின் மேற்கண்ட எல்லா வரிகளும் ஒன்றிணைந்ததாக, மெல்கிசேதேக்கில் சித்திரமாக குறிப்பிட்டுள்ளது. கர்த்தருடைய சிங்காசனத்தின்மீது மெல்கிசேதேக் ஒரு ஆசாரியராக இருக்கிறார். அதாவது, இவர் தேவனுடைய ஆசாரியராகவும், அதே சமயத்தில் அவர் ஒரு இராஜாவாகவும் அல்லது ஆளுநராகவும் இரு அலுவல்களைப் பெற்றுள்ளார்.

ஆரோனின் முறைமைப்படி, இறுதியில், இயேசு ஆசாரியராக ஆளுகை செய்யும் அதிகாரமின்றி, ஒரு பலிசெலுத்துகிற ஆசாரியராக மட்டுமே இருக்கமுடியாது என்ற உண்மையை, பரிசுத்த பவுல் நம் கவனத்துக்குக் கொண்டுவருகிறார். ஆனால் மெல்கிசேதக்கின் முறைமைப்படி அவர் ஆசாரியராக இருப்பார். இதைக்குறித்து தாவீதின் சங்கீதத்தில் தெய்வீக வெளிப்படுத்தலாக கூறப்பட்டிருப்பதை பரிசுத்த பவுல் மேற்கோள் காண்பிக்கிறார்; “நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம்மாறாமலுமிருப்பார்”. இந்த தீர்க்கதரிசன வாக்கியத்தின்மீது, மிக முக்கியமான வாதங்களை பரிசுத்த பவுல் அடிப்படையாக அளிக்கிறார். இயேசு மற்றும் மேசியாவின் இராஜ்யத்தையும், அதன் குணாதிசயத்தையும் குறித்த தெய்வீக முன்நோக்கங்களை அவர் காண்பிக்கிறார்.

அகில உலக வேதாகம ஆய்வுகளை முறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குழு, இயேசுவின் முதலாம் வருகையில் அவரால் செய்யப்பட்ட அற்புதங்கள், அவரது இரண்டாம் வருகையில் அவர் நிறைவேற்றவிருக்கும் மாபெரும் அற்புதங்களுக்கும், கிரியைகளுக்குமான முன்னடையாளங்களாக மட்டுமே இருந்தது என்ற உண்மையை, தங்கள் சிந்தையில் தெளிவாக வைத்திருந்தனர். இக்கருத்தின் அடிப்படையிலேயே மேசியாவின் இராஜ்யத்தைக் குறித்த ஏசாயா தீர்க்கதரிசனத்தை, அவர்கள் நமக்கு நம் பாடத்தின் திறவுகோல் வசனமாகக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்றவேளையில் அவரது ஆயிரவருட ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, நிறைவேற்றப்படவிருக்கும் மாபெரும் பணியின் முன்னடையாளங்களாக அல்லது எடுத்துக்காட்டுக்களாக இயேசு நிகழ்த்திய அற்புதங்களனைத்தும் இருப்பதை, அப்போஸ்தலர்களது போதனையின் பொதுவான நடை காண்பிக்கிறது. இதோடு இந்த திறவுகோல் வசனத்தின் கருத்துக்கள் ஒத்திருக்கின்றன. “இக்காரியங்களை இயேசு செய்து, தம் மகிமையை வெளிப்படுத்தினார்”, அதாவது, தம் இராஜ்யத்தின் மகிமையையும் வல்லமையையும் முன்கூட்டியே காண்பித்தார் என்று வாசிக்கிறோம்.

இயேசுவும் அவரது சீஷர்களும் பாலஸ்தீனாவிலுள்ள எல்லா நோயாளிகளையும் குணமாக்க முயற்சித்தார்கள் என்று நாம் ஒரு கனம்கூட சிந்திக்கவில்லை. அதற்கு மாறாக, நோய்வாய்ப்பட்டிருந்த திரளான ஜனங்கள் மத்தியில், விசேஷ விசுவாசத்தை வெளிப்படுத்தினவர்கள் மட்டுமே விதிவிலக்காயிருந்து, குணமாக்கப்பட்டனர். நம் பாடத்தில் காணும் இந்த சம்பவத்தில், சாலையோரமிருந்த அநேக பிச்சைக்கார குருடர்களில், பர்திமேயு மட்டுமே குணமாக்கப்பட்டார் என்பதை நாம் நிச்சயித்திருக்கிறோம். பாலஸ்தீனா, சிரியா, எகிப்து,பிச்சைக்கார குருடர்கள் வசித்த தேசங்களாக இருந்தன. கர்த்தர் பர்திமேயுவின்மீது அக்கறை காட்டாமலும், அவரை குணமாக்க முற்படாமலும் ஏற்கனவே கடந்துபோயிருந்தார். தன் விசுவாசத்தினால் அவர் கதறியதாலும், அவரது சத்தத்தை அமர்த்தத்தேடி, அவரது விசுவாசத்தை திசைதிருப்ப முயற்சித்தவர்களது சத்தத்துக்கு செவிகொடாதிருந்ததாலும், அவர் தன் பார்வையை மீட்டெடுக்கப் பெற்றார்.

### பார்வையற்ற தன்மை இழிவானது

இதுபோன்ற சம்பவம் பெதஸ்தா குளத்தில் நிகழ்ந்ததை நாம் நினைவுகூர்வோம். அங்கே திரளான ஜனங்கள் குளத்தில் இறங்கி குணமடைவதற்காக,

தண்ணீர் கலக்கப்படும் வேளையை எதிர்பார்த்து காத்திருந்தனர். அவர்களில் ஒரேயொருவனிடத்தில் மட்டும்; ''உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட'' என்று இயேசு கூறினார். இயேசுவின் அற்புதங்கள் வரவிருக்கிற அவரது மேசியானிய இராஜ்யத்தினை சித்திரக் காட்சியாக காண்பிக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளும்போது, நிகழ்வுகளின் முறையான பார்வையை நாம் அடைகிறோம். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் சுட்டிக்காட்டுவதுபோல், எல்லா குருடர்க்கும், எல்லா முடவர்க்கும், செவிடர் அனைவருக்கும் நன்மையும், மகிழ்ச்சியுமான நாள் வரவிருக்கிறது என்பதில் சந்தோஷமடைகிறோம் – ஏசாயா 35:5,6.

''அவைகளுக்கு கண்கள் இருந்தும் அவைகள் காண்பதில்லை, காதுகளிருந்தும் கேளாது'' – சங் 135:16,17. முழு உலகின் ஜனங்களும், மிக ஆர்வமுள்ளதும் மிக்க ஆதாயமளிப்பதுமான காரியங்களில் குருடராயும், செவிடராயும் இருப்பதாக வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எப்போதாவது மட்டும் இங்கும் அங்கும், பழங்காலத்து பர்திமேயுவைப்போல், தன் குருட்டுத்தனத்திலிருந்தும், செவிட்டுத்தன்மையிலிருந்தும் சுகமடையக்கூடிய சாத்தியத்தை புரிந்துகொள்கிறார்கள், மேலும் முறையான படிகளை எடுத்து, குணமடைதலை ஆதாயப்படுத்துகின்றனர். பரிசுத்த பவுல் , இந்த பார்வையற்ற நிலைமையைப்பற்றி நமக்குக் கூறுகிறார்; ''அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராத–படிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் (சாத்தான்) அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்''– 2கொரிந்4:4.

6000 வருடங்களுக்கு முன்பு, தேவனுடைய நன்மைகளையும், மனிதருக்கு உயர்ந்த நலன்களைத் தருகின்ற காரியங்களையும் புரிந்துகொள்ள முடியாதபடிக்கு, மனிதனுடைய மனதைக் குருடாக்கி, சாத்தான் இப்பணியைத் துவங்கினான். இதை அவன் தொடர்ந்து செய்துவருகிறான். சர்வ வல்லவர் ஏவாளிடத்தில் பாவத்தின் தண்டனையைக் குறித்து,''அதைத் தின்னும் நாளிலே சாகவே சாவாய்'' என்று கட்டளையிட்டதற்கு முரண்பாடாக சாத்தான் பேசினான், இது தேவனுடைய பார்வையில் வஞ்சனையாக இருந்தது. ''நீ சாகவே சாவதில்லை'' என்று சாத்தான் பிரகடனம் செய்தான். அறிவின் மாபெரும் ஆசீர்வாதங்களை அடையாதபடி விலக்கவே தேவனுடைய தரப்பில் இந்த பயமுறுத்தல் கொடுக்கப்படுகிறது என்று அவன் அவளை இணங்கச் செய்தான். இவ்வாறு அவளுடையதும் அவளது கணவருடையதுமான உண்மை நலன், கீழ்ப்படியாமை மூலம் வீழ்ச்சியடைய அவன் செய்தான்.

இங்கு இயல்பாகவே ஒரு கேள்வி எழுகிறது, தவறாக காரியங்களை சித்தரித்து, நம் ஆதிப்பெற்றோரை வஞ்சித்ததில் சாத்தானுக்கு என்ன நோக்கம் இருந்தது? ஏன் அவர்களுடைய கீழ்ப்படியாமையிலும் தேவனுக்கு அந்நியராகும்படி விலக்குவதிலும் அவன் ஆர்வம் காட்டினான்? இவ்வாறு மாத்திரமே அவர்களை பாவத்தின் அவனுடைய சொந்த அடிமைகளாக அவனால் திறம்பட செய்யமுடியும் என்பதே இதற்கு பதிலாயிருக்கிறது. தேவனை அவர்கள் தங்கள் ஞானமும் அன்புமுள்ள தகப்பனாக அங்கீகரித்து, அவரிடத்தில் நம்பிக்கை வைத்திருந்தவரைக்கும், அவரிடத்தில் உண்மைத்தன்மையுள்ளோராய் அவர்களால் நிலைத்திருக்க முடிந்தது, அதற்கேற்ப பாவத்துக்கு ஊழியக்காரர்களாக ஆகாதிருந்தனர்.

தேவனுடைய தெய்வீக குணாதிசயத்தையும், திட்டத்தையும் தவறாக சித்தரித்துக் காண்பிக்கும் வேலையை சாத்தான் ஆறாயிரம் வருடங்களாக தொடர்ந்து செய்துவருகிறான். இருளுக்கு பதிலாக வெளிச்சத்தையும், வெளிச்சத்துக்கு பதிலாக இருளையும் அவன் காண்பிப்பதாயும், அவனுடைய ஆயுதங்களைக் குறித்து நாம் அறியாமையில் இருப்பதில்லை என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். இப்பிரபஞ்சத்தின் தேவன் அவிசுவாசிகள் எல்லாருடைய மனங்களையும் குருடாக்கியிருக்கிறான் என்று நமக்குக் கூறினபிறகு, தேவனுடைய மகிமையின் அறிவாகிய வெளிச்சம் அவர்களுடைய இருதயங்களில் பிரகாசியாதபடிக்கும், தேவனுடைய நிஜமான நன்மைகளை அவர்கள் காணாதபடிக்கும் இது செய்யப்பட்டதாக பரி.பவுல் குறிப்பிடுகிறார். மேலும் தேவனுடைய நன்மையின் இந்த வெளிச்சம், நம் கர்த்தராகிய இயேசுவின் முகத்திலிருந்து, அதைக் கண்டவர்கள்மீது பிரதிபலித்தது என்று அவர் விவரிக்கின்றார்.

இந்த அழகான கவிதை வடிவில், அப்போஸ்தலர் அற்புதமான சத்தியத்தை நமக்கு அளித்திருக்கிறார். இதில் வேத மாணவர்கள் அதிகதிகமாக மதிப்பிட கற்கிறார்கள். தேவன் அன்பாயிருக்கிறார்; இதற்கு முரணாக நாம் கேட்டிருக்கிற கதைகள் அனைத்தும், நம் சிந்தைகளை குருடாக்கும் நோக்கங்கொண்டவை, நம் சிறந்த நண்பருக்கு எதிராக தப்பெண்ணம் அடையச்செய்பவை. எனவே இது சாத்தானால் விடாப்பிடியாக பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. புறஜாதியார் மத்தியில் மட்டுமல்ல, கிறிஸ்தவர்கள் மத்தியிலும்கூட, சத்தியத்துக்கு நேரெதிரான பல்வேறு போதனைகள் போதிக்கப்படுகிறது. இதை ''பிசாசுகளின் உபதேசங்கள்'' என்று பரி.பவுல் அழைக்கிறார் – 1தீமோ4:1.

இருண்ட யுகங்களின்போது, நம் கிறிஸ்தவ

விசுவாசப் பிரமாணங்களில், விரோதி தன் போதனைகளைப் புகுத்தி, கிரியை செய்தான். கிறிஸ்தவ தேவாலயங்களின் சுவர்கள்மீது அவற்றை வரைந்தான். ஒரு இருண்ட நாளின் நாடகங்களில் அவற்றைக் கொண்டு நடித்தான். இவைகளனைத்தும் மோசமான கற்பனையாக, பிசாசுபோல தேவனைச் சித்தரித்தன. மனுக்குல சந்ததியின் ஒவ்வொரு அங்கமும் நித்திய ஆக்கினையால் துன்புற ஆதிமுதல் நோக்கமாயிருந்த அவர், நம் சந்ததியை சிருஷ்டித்தபோது என்ன செய்துகொண்டிருந்தார்? என்ற சிந்தனைகளால் அவர் அடையாளப்படுத்தப்பட்டிருந்தார். இந்த பயங்கரமான பிரதிநிதித்துவங்களால், இருண்ட யுகங்களில் உலகம் தேவனிடத்தில் நெருங்கிவராதிருந்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. வேதாகமம் ஜனங்களுடைய மரியாதையை திரும்பப் பெற்றபோதிலும், இந்த பிசாசுகளின் உபதேசங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததால், உலகம் அதை நேசிப்பதில் தடையை ஏற்படுத்தி வருகிறதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

நாம் எல்லோரும் விரோதியினால் ஓரளவு குருடாக்கப்பட்டிருந்தோம் என்று தற்போது நாம் கற்றிருக்கிறோம். அவனுடைய குருடாக்கும் ஆதிக்கத்திலிருந்து நாம் விடுதலை பெறும்போது, இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய தயவை எண்ணி, நம் இருதயங்கள் மகிழ்ச்சியடைகிறது!

### சிலர் மட்டுமே இன்னும் பார்க்கின்றனர்

எபேசு சபைக்கு எழுதும்போது, அவர்கள் சிலவற்றைக் கண்டிருந்தபோதிலும், காண்பதற்கு இன்னும் அதிகமானவைகளுண்டு என்று அப்போஸ்தலர் அறிவுறுத்துகிறார். "என் ஜெபங்களில் உங்களை நினைத்து...நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்.. நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்" என்பதை நாம் மேற்கோள் காட்டுகிறோம். "...பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு... நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூட, கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும்... அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்" என்று மீண்டும் கூறுகிறார். நமக்காகவும் சபையிலுள்ள எல்லோருக்காகவும் இந்த ஜெபத்தை ஏறெடுப்பது இன்னும் நமக்கு அவசியமாயுள்ளது.

அப்போஸ்தலர்கள் அறிவிக்கிறபடி, உலகமோ இன்னும் இருளில், தீயோனின் பிடியில் கிடக்கிறது, அது சாத்தான் செழித்தோங்கச் செய்த மூட நம்பிக்கைகளின் அடிமைத்தனத்துக்கு உட்பட்டிருக்கிறது. தற்போது, பார்திமேயுவைப்போல் சிலருடைய கண்கள் மட்டுமே திறக்கப்பட்டிருக்கிறது. தங்களை அமைதலாயிருக்கவும், அறியாமையாகிய குருட்டுத்தனத்திலேயே நீடிக்கவும் உத்தரவிடுகிறவர்களது உணர்வைப் புறக்கணிக்க மனதாயிருந்து, தேவஅறிவின் வெளிச்சத்திற்காக பெரிதும் ஏங்குகிறவர்களாயும், விசேஷ வாய்ப்புக்களைக் காணவும், அவர்கள் விசேஷ குணாதிசயத்தையுடைய ஜனங்களாயுள்ளனர். நீதியின்மீது பசிதாகமுடையோராக இருக்கும் இவர்கள், வாக்குத்தத்தத்தால் நிரப்பப்பட்டிருந்து, பார்வையடையும்படி ஏக்கமாயிருப்பதால், அதை தற்காலத்தில் அடையும் நம்பிக்கையைப் பெறுவார்கள்.

மகிமை நிறைந்த மாற்றத்தை வாக்களித்திருப்பதால் தேவனுக்கு ஸ்தோத்திரம்! பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பார்திமேயுவை, அடையாளமான வழியில் குணப்படுத்தின, ஒளியின் மகிமை நிறைந்த ராஜாவாயிருக்கிற அவருக்கு, இருளின் அதிபதியாகிய சாத்தான் வழியை விடவேண்டும். ஒளியின் ராஜா ராஜ்யத்தின் அதிகாரத்திற்கு வரவேண்டும் என்ற செயல்திட்டத்திற்குப் பின்னால் தெய்வீக வல்லமை இருக்கிறது. சாத்தான் ஆயிரம் ஆண்டுகள் கட்டப்படவேண்டும், அவனுடைய இருளின் கிரியைகள் அனைத்தும் முறியடிக்கப்படவேண்டும். தேவனுடைய உண்மை குணாதிசயம் மற்றும் அன்பின் திட்டங்கள் தவறாக சித்தரிக்கப்பட்டு வந்ததற்கு பதிலாக, அவருடைய உண்மைகள் மனுக்குலத்துக்கு கொடுக்கப்பட்டிருக்கும். சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல, முழு உலகும் தேவனுடைய மகிமையின் அறிவாகிய வெளிச்சத்தால் நிறைந்திருக்கும். ஒருவனும் தன் அயலானிடம், கர்த்தரை அறிந்துகொள் என்று அறிவிக்க வேண்டியதில்லை. அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் அவரை அறிந்துகொள்வார்கள் – ஏசாயா **11:9**; எரே **31:34**.

### குருடாயிருக்கும் கண்கள் யாவும் திறக்கப்படும்

இத்தீர்க்கதரிசனத்தை வாசிப்பவர்கள் யாராகிலும், மாம்சக்கண்கள் மட்டுமே திறக்கப்படும் என்றும், மேசியாவின் ராஜ்யத்தில் அனைத்து சுபாவ குருட்டுத்தன்மையும் சரிசெய்யப்படும் என்று எண்ணுவார்களானால், அவர்கள், மகிமைநிறைந்த வேலை நிறைவேற்றப்படுவதன் சிறு பகுதியை மட்டுமே

காண்கிறார்கள். சாத்தான் மனுக்குலத்தை அறியாமை மற்றும் மூடப்பழக்கமாகிய குருட்டுத்தன்மையால் பாதிப்புக்குள்ளாக்கியிருப்பது, சரீர ரீதியான குருட்டுத்தன்மையைக் காட்டிலும் மிகவும் மோசமானது. குருடாக்கப்பட்ட கண்கள் அனைத்தும் திறக்கப்படும், செவிடாக்கப்பட்ட காதுகள் அனைத்தும் கேட்கும் என்ற உத்திரவாதத்தை கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிறார். கண்கள் யாவும் அவரைக் காணும், அவரை உருவக் குத்தினவனும் காண்பான்'' என்று வேதாகமம் பிரகடனப்படுத்துவது, சந்தேகத்திற்கிடமின்றி, புரிந்து கொள்ளுதலின் கண்களைக் குறித்தே விசேஷமாகக் குறிப்பிடுகிறது. இயேசு தம் சீஷர்களிடம்; ''இன்னும் சிறிது காலத்தில் உலகம் என்னைக் காணாது, ஆனால் நீங்களோ என்னைக் காண்பீர்கள்'' என்றார். ஆம்! அப்.யோவானும்; ''அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதனால் அவருக்கு ஒப்பாயிருப்போம்'' என்று கூறுகிறார்.

முதலாம் உயிர்த்தெழுதலில் சபை வகுப்பார் அற்புதமாக மாறுதலடைந்து, தேவதூதர்களைப்போல ஆவிக்குரிய ஜீவிகளாக மாற்றப்பட்டு, தங்கள் ஆண்டவரை முகமுகமாக காண்பர், ஏனெனில் ஆவிக்குரிய ஜீவிகள் அவருக்கொப்பாக இருக்கிறார்கள். ஆனால் உலகமோ, இத்தன்மையில் அவரை ஒருபோதும் காணாது. தற்போது எப்படி விசுவாசிகள் தங்கள் பிதாவையும், கர்த்தராகிய இயேசுவையும் விசுவாசக் கண்களாலும், புரிந்துகொள்ளுதலின் கண்களாலும் காண்கிறார்களோ, அதுபோலவே உலகின் ஜனங்களுடைய புரிந்துகொள்ளுதலின் கண்களும் திறக்கப்பட்டு, அவரைக் காண்பார்கள். தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை, தமது ஆவியினால் அவைகளை நமக்கு வெளிப்படுத்தினவைகளை, நாம் நமது ஆவிக்குரிய பார்வையோடு காண்கிறவைகளை, ''கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை'' – 1கொரி2:9,10.

அதுபோலவே, ஆயிரவருட காலப்பகுதியின்போது, குருடாக்கப்பட்ட அனைத்துக் கண்களும், நன்மை, மகத்துவம், அன்பு, தேவவல்லமை ஆகியவற்றிற்காக திறக்கப்படும். இவ்வாறு உலகம் மேசியாவின் ராஜ்யத்தின் மூலமாக அந்த அறிவால் உதவிபெற்று, தேவனை அறிந்துகொள்ளும். அப்பொழுது நீட்டிக்கப்பட்டுள்ள சிலாக்கியங்களால் எல்லோரும் பயனடைந்து, அந்த மகிமை நிறைந்த அறிவின் அளவை அடைவர். இதை இயேசு குறிப்பிடுகையில், 'ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்'' என்றார்.

### தடை ஏற்படுத்துவோரல்ல, உதவுபவர்கள்

முன்னடையாளத்தில், ஜனங்கள் பர்திமேயுவை அமைதலாயிருக்கும்படி கட்டளையிட்டனர். ஆனால் இயேசு அவரைஅழைத்தபோதோ, அவர்கள் உற்சாகப்படுத்தும் வார்த்தைகளைக் கொடுப்பவர்களோடு சேர்ந்துகொண்டு, பார்வையற்ற அவரை இரட்சகரிடத்தில் கொண்டுவரவும் உதவினர். பிந்தைய அவர்களுடைய செயல்பாடு, கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரின் நடைமுறையைக் குறிப்பிடவேண்டும். அவர்கள் பார்வையற்றவரை, அதாவது மூடநம்பிக்கைகளால் வழியைவிட்டு விலகியிருப்போர் அனைவரையும் அவர்களுடைய குருட்டுத்தனத்திலிருந்து விடுவிக்க, அவரே இரக்கமுள்ளவராயும், விருப்பமுள்ளவராயும் இருக்கிறார் என்று உணர்ந்து, இரட்சகரிடத்தில் வரும்படியாக, தேவனுடைய பிள்ளைகள் உற்சாகப்படுத்தவேண்டும்.

இந்த கூர்ந்து நோக்குதல்களை வாழ்வின் பல்வேறு நடவடிக்கைகளுக்கு நாம் நீட்டிக்க முடியும். அதன்படி, அநேகர் வேதாகமத்தின் அழகுகளைப் பொருத்தவரையில் குருடர்களாகவே இருக்கின்றனர், இதனால் நிஜமான போதனைகளின் அழகைக்காண , புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்ட அனைவரும், அதே ஆசீர்வாதங்களை மற்றவர்கள் பெறுவதற்கு உதவும்படி விழிப்பாயிருக்கவேண்டும். இப்பாடத்தை இயல்பான பார்வைக்கும் பயன்படும்படி நாம் பொருத்தமுடியும். வியாபாரத்திலும் அல்லது இன்பத்தைத் தேடியும் சிலர் வெகு ஆழமாக மூழ்கியிருந்து, இயற்கையின் மகிமை நிறைந்த அழகுகளைப் பார்க்கும்படி தங்கள் கண்களை ஒருபோதும் உயர்த்துவதில்லை. சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகரைக் குறித்தும், தெய்வீக ஞானத்தைக் குறித்தும் பறைசாற்றுகிற ஒளிரும் நட்சத்திரங்கள் கூறும் செய்தியிலிருந்து, குருடாக்கப்பட்டவர்கள் ஆசீர்வாதத்தை அடையத் தவறுகிறார்கள். ஏனெனில் அவர்கள் காணத் தவறுகிறார்கள். ''அவர்கள் கண்களை உடையோராயிருந்தும் அவைகள் காண்பதில்லை''.

மகாபெரிய நித்திய தேவனைக் குறித்தும், அவருடைய பூமிக்குரிய பிரதானமான கரத்தின் கிரியையாக மனுக்குலம் இருப்பதையும், இயற்கை அனைத்தும் பேசுகின்றன. ஆகவே அவரை அறிவதும், அவருக்கு ஊழியம் செய்யத் தேடுவதும் நம் உயர்ந்த குறிக்கோளாக இருக்கவேண்டும். ஆனால் நட்சத்திரங்கள் அளிக்கும் பாடங்களுக்கு எத்தனைபேர், பிறவிக்குருடரும் பிறவி செவிடருமாயிருக்கின்றனர்! தீர்க்கதரிசி இதைக்குறித்து

அறிவிக்கிறார்; "பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை" – சங் 19:2,3. சிலர் அவர்களுடைய சொந்த சுயநலத்தின் காரணமாக பெருமளவு மகிழ்ச்சியற்ற நிலையை உணருவதை காணமுடியாதபடி, மனரீதியாக மிகவும் குருடராயுள்ளனர். அவர்களது வீடுகள், சுயநலவேட்கை கண்டிப்பு குற்றங்காணுதல்கள் திருப்தியின்மையின் இடங்களாக இருப்பதிலிருந்து மாறி, பாதுகாப்பும் மகிழ்ச்சியும் நிறைந்ததாய், அதிக அழகுள்ளதாக இருக்கும் என அவர்கள் காண்பதில்லை.

தங்களிடம் அல்லது மற்றவர்களிடம் இந்த நிலைமைகள் காணப்படுவதை உணரும் எல்லோரும், "ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும்" என்று கதறவேண்டும். மேசியாவின் ராஜ்யம், ஆதாமின் சந்ததியார் அனைவருடைய புரிந்துகொள்ளுதலின் கண்களைத் திறந்து, ஆசீர்வதிக்கும் காலம் சமீபித்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ளும் அளவிற்கு சந்தோஷமடையவேண்டும்.

------------

**R5489**

# தற்கால சத்தியத்தைக்குறித்த நமக்கான பொறுப்பு

## OUR RESPONSIBILITY CONCERNING PRESENT TRUTH

அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு
எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது;
அதைச் சகித்து இளைத்துப்போனேன்; எனக்குப்
பொறுக்கக்கூடாமற்போயிற்று" – எரேமியா 20:9.

எரேமியா தீர்க்கதரிசி இங்கே மிகவும் வலிமையான ஓர் ஒப்பீட்டைப் பயன்படுத்துகின்றார். அவருடைய இருதயத்தில் எரியும் வைராக்கியத்தைப் பெற்றிருந்து, அவர் பேசவேண்டுமென்று அவருக்கு வழங்கப்பட்ட செய்தியின் முக்கியத்துவத்தைக் குறித்த ஒரு பற்றியெரிகிற உணர்வுடையவராயிருந்தார். இஸ்ரயேலைப்பற்றிய அவரது முந்தைய தேவ வார்த்தையின் அறிவிப்பானது, அவருக்கு மிகுந்த மனச்சோர்வு உண்டுபண்ணுமளவுக்கு மிகவும் அசட்டை பண்ணப்பட்டு, நிராகரிக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து அவர்தாமே பின்வருமாறு அறிவித்திருந்தார்: "நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நிந்தையும், பரிகாசமுமாயிற்று, ஆதலால் நான் அவரைப் பிரஸ்தாபம் பண்ணாமலும் இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன்; ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது; அதைச் சகித்து இளைத்துப்போனேன்; எனக்குப் பொறுக்கக்கூடாமற் போயிற்று!". அவருக்கு கொடுக்கப்பட்ட தேவசெய்தி, பேசப்பட்டிருக்கவேண்டும். இஸ்ரயேலர்கள் தங்கள் எதிராளிகளின் கரங்களில் ஒப்புக்கொடுக்கப்படவிருக்கிறார்கள் என்று அவர்களிடத்தில் சொல்லும்படி கர்த்தர் அவருக்கு அறிவுறுத்தியிருந்தார்.

எரேமியா தீர்க்கதரிசியிடத்தில் ஒப்படைக்கப்பட்ட கர்த்தருடைய இந்த வார்த்தையானது, யூதர்களின் எழுபது ஆண்டுகால சிறையிருப்பிற்கு முன் அளிக்கப்பட்டது. யூதாவின் இராஜா தங்கள் எதிராளிகளுக்கு விரோதமாக ஜெயம்பெறுவார் என்று அறிவித்த கள்ளத்தீர்க்கதரிசிகள் அவர்களிடையே இருந்தார்கள். இந்த உறுதிமொழியைக் கேட்டு ஜனங்கள் மகிழ்ச்சியடைந்து, தங்களுக்கு தேவனிடமிருந்து உண்மையான செய்தியை வழங்கின கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசியையோ அவர்கள் அசட்டைபண்ணினார்கள். அவர்கள் கர்த்தருடன் செய்த உடன்படிக்கையைக் கைக்கொள்ளத் தவறிவிட்டார்கள் என்பதையும், தாங்கள் யாருடைய ஜனங்கள் என்று அறிக்கை செய்துகொண்டிருக்கிறார்களோ, யாருக்கு தாங்கள் உண்மையுடன் சேவிப்பதாக வாக்களித்தார்களோ அந்த யேகோவா தேவனுக்கான தங்களுடைய பொறுப்புகளில் தவறிவிட்டார்கள் என்பதையும், அப்போதும்கூட, யார் மனந்திரும்புகிறார்களோ அவர்கள் விடுவிக்கப்பட இன்னும் நேரமிருக்கிறது என்பதையும், ஆனால் அந்த தேசம் நிச்சயமாக அவர்களின் எதிராளிகளிடம் ஒப்புவிக்கப்பட்டு, சிறைப்பட்டுப்போகும் என்பதையும் அவர்களிடம் எரேமியா கூறினார்.

### எரேமியாவுக்கு ஏற்பட்ட கடுஞ்சோதனை

கள்ளத் தீர்க்கதரிசிகள் இராஜாவை ஊக்குவிப்பார்கள் என்பதையும், யேகோவா தேவன் அறிவிக்கும்படி தனக்கு கட்டளையிட்டிருந்த செய்தியை மீண்டும் வலியுறுத்துவதன் மூலம், இராஜாவின் கோபத்தை தனக்குத்தானே வருவித்துக்கொள்வேன் என்பதையும் எரேமியா நன்கறிந்திருந்தார். கர்த்தருக்கு உண்மைத்தன்மையோடு இருப்பதன்மூலம் ஏற்படும் அவப்பெயர் நிந்தை மற்றும் உபத்திரவம் ஆகியவற்றை அனுபவிக்க நேரிடும் என்று அறிந்து, அவர் குறுகிப்போனார். என்றாலும், தான் அமைதியாயிருப்பதன் மூலம், அவர் சோதனையை மேற்கொண்டார். என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை, தேவன் தனக்குக் கட்டளையிட்டதை அறிவிப்பேன் என்றிருந்தார். தனக்குக்

கொடுக்கப்பட்ட வார்த்தைகளை அவர் மீண்டும் இஸ்ரயேலரிடம் கூறுபவராய் இருந்தார். அவர்களுக்கு மேலும் ஓர் எச்சரிப்பைக் கொடுப்பவராயுமிருந்தார்.

எரேமியா தனது அச்சங்களால் தான் மேற்கொள்ளப்பட அனுமதித்திருந்து, செய்தியை சொல்லாது நிறுத்தியிருப்பாரானால், சந்தேகத்திற்கிடமின்றி அவர் தேவனுடைய வாயாக இருப்பதிலிருந்து புறந்தள்ளப்பட்டு, அவருக்குப் பதிலாக மற்றொருவர் செய்தியை வழங்க நியமிக்கப்பட்டிருப்பார். தீர்க்கதரிசியின் இருதயத்தில் இருந்த அனல் கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழந்து, இறுதியில் அணைந்தே போயிருக்கும். காற்றோட்டத்திலிருந்து சிறிதுநேரம் தீ மூடிவைக்கப்படும் பொழுது, அது தானாக அணைந்துவிடும். இது பௌதீக இயல்புக்கு எவ்வளவு உண்மையாக உள்ளதோ, அதுபோலவே தார்மீக மற்றும் ஆவிக்குரிய ஆற்றல்களின் செயல்பாடுகளிலும் உண்மையாக உள்ளது. அதனால்தான் அப்போஸ்தலனாகிய பவுலும், “ஆவியை அவித்துப் போடாதிருங்கள்” என்று வலியுறுத்தினார் (1தெச 5:19). நம்முடைய கடமையைச் செய்யத் தவறியதன் மூலமும், நமது உடன்படிக்கையை உண்மையாகக் கடைப்பிடிக்கத் தவறியதன் மூலமும், தேவனுடைய பரிசுத்த ஆவியை நம்முடைய இருதயங்களில் அணைந்துபோக அனுமதித்துவிடுவோம். நமக்குள் இருக்கும் ஒளியாகிய பரிசுத்த அக்கினியானது, சிறிதுநேரம் மங்கியெரியும், இறுதியாக அணைந்தேபோய்விடும். பேசும்படி பிதாவாகிய தேவனால் கட்டளையிடப்பட்டதை எரேமியா தீர்க்கதரிசியால் தடுக்கமுடியவில்லை. யேகோவா தேவனுடனான தனது உறவை இழக்காமலும், தன் ஆத்துமாவுக்குள் இருக்கிற அக்கினியை அணைக்க முடியாமலும் அவர் இருந்தார்.

### இன்று தேவன் நமக்குக் கொடுத்துள்ள செய்தி

அவ்வாறுதான் இன்று நமக்கும்கூட இருக்கிறது. தேவன் தம்முடைய ஆலோசனைகளின் இரகசியத்தை அறியும்படிக்கு நம்மை அனுமதித்திருக்கிறார். அவர் நமக்கு ஓர் அற்புதமான ஆவிக்குரிய பிரகாசத்தை அருளியிருக்கிறார். அவருடைய ஜனம் என்று சொல்லிக்கொண்டிருப்பவர்களிடம் அறிவிப்பதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செய்தியை நம்மிடம் கொடுத்துள்ளார். புறஜாதிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரம், காலாவதியாகப்போகிறது என்று கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்டிருந்த, ஒரு பெரிய மாற்றம் வரவிருக்கிறது. கிறிஸ்தவ மண்டலத்தின் தற்போதைய மத அமைப்புக்கள் வீழ்ச்சியடையப்போகிறது என்றும், தற்போதைய ஒழுங்கின் ஆளுகை முடிவுக்கு வரப்போகிறது என்றும், ஆளுகை “உரிமைக்காரனானவருக்கு” வழங்கப்பட உள்ளது என்றும் நாம் அறிவுறுத்தப்படுகிறோம். இந்த உலகத்தின் இராஜ்யங்கள், “நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்யங்களாக” ஆகப்போகின்றன; “அவர் சதாகாலங்களிலும் இராஜ்யபாரம் பண்ணுவார்”(வெளிப்11:15).

இச்செய்தியை மூர்க்கமான முறையில் கூறக்கூடாது. இருப்பினும், அதைக் கூறியாக வேண்டும். தேவன் நியமித்த மாபெரும் ராஜா வரப்போகிறார். எரேமியாவின் நாட்களில், தேவனுடைய இராஜ்யம், அதாவது அவருடைய நிழலான இராஜ்யமானது கவிழ்க்கப்படப்போகிறது என்பதே செய்தியாயிருந்தது. இவ்வுலகத்தின் அதிபதியினுடைய ஆதிக்கத்தின் கீழ், புறஜாதிகளுக்கான அதிகாரம் குத்தகைக்கு விடப்படுவது துவங்கப்படஇருந்தது. இந்த ஒழுங்கு ஒரு குறிப்பிட்ட காலமளவும் நடைபெற அனுமதிக்கப்படவேண்டும். அந்த நேரம் இப்போது முடிவடையும் தருவாயில் உள்ளது. இராஜாவின் குமாரன் தம்முடைய நீண்டகாலமாக வாக்களிக்கப்பட்ட சுதந்திரத்தை விரைவில் பெறவிருக்கிறார்(சங்2:7–9). நமது செய்தி இப்போது தேவனுடைய இராஜ்யம் கவிழ்க்கப்படுவது பற்றி அல்லாமல், மாறாக, அதற்கு நேர்மாறானதாக, அதாவது, இருளின் அந்தகார இராஜ்யம் கவிழ்க்கப்பட்டு, தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் பற்றியது என்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

எனவே இந்த மகிமையான செய்தியை இப்போது நாம் அறிவிக்கவேண்டும். அதை நம்முடைய செயல்களிலும், வார்த்தைகளிலும், அச்சிடப்பட்ட பிரதிகளிலும், கண்களால் காணும்படியாக சித்திரமாக வழங்குவதன் மூலமும், மேலும் கர்த்தர் நமக்கு அளிக்கும் எல்லா வழிகளிலும் நாம் அதனை அறிவிக்கவேண்டும். பாடுபடுவதற்கு பயப்பட்டோ, மனிதர்களின் பார்வையில் கௌரவத்தை இழக்க நேரிடுமோ என்ற பயத்தாலோ, சுகபோகத்தை நேசிப்பதாலோ அல்லது வேறெந்தக் காரணத்திற்காகவும் நாம் தேவனுடைய செய்தியைத் தெரிவிக்காமல் தவறினோமானால், அது நம்மிடமிருந்து எடுக்கப்பட்டு, தகுதியானவருக்கு வழங்கப்படும். கர்த்தர் அவருக்காகவும் நீதிக்காகவும் சத்தியத்திற்காகவும் துணிவுடன் நிற்கும் வீரம் மிக்கவர்களைத் தேடிக்கொண்டிருக்கிறார். நாம் பலவீனமானவர்கள் என்று நிரூபித்தோமானால், நாம் இராஜ்யத்திற்குத் தகுதியற்றவர்களாவோம்.

### நமக்கு நியமிக்கப்பட்டதை நாம் நிறைவேற்றுகிறோமா ?

பிரஸ்தாபப்படுத்தும்படி, இதுவரை மனிதர்களுக்கோ அல்லது தூதர்களுக்கோ வழங்கப்படாத

இப்படிப்பட்ட இந்த அற்புதமான செய்தி, நமக்குள் பற்றியெரிந்து கொண்டிருக்கிறதா? அதன் தூண்டுதல் மற்ற இருதயங்களில் அனல் உண்டாக்குமளவுக்கு நாம் அதை அறிவிக்கிறோமா? நாமும் கவிஞருடன் சேர்ந்து பின்வருமாறு பாடலாம்;

“நான் இக்கதையைச் சொல்ல வெகுவாய் விரும்புகிறேன்,

அது எனக்கு அதிக பலன் செய்தது உண்மையே!

மேலும் அந்தக் காரணத்தினால்தானே

நான் அதை இப்போது உங்களுக்குச் சொல்கிறேனே!

நாம் மகிழ்ச்சியின் நற்செய்தியை அறிவிக்காமல் தவிர்ப்போமானால், அதன் விளைவாக தேவனுடைய பரிசுத்தஆவியின் அக்கினி நமக்குள் அணைந்துபோய்விடும். நமக்குள் இருக்கும் வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! (மத் 6:23). தேவனுடைய செய்தியை – சத்தியத்தை உடைமையாகப் பெற்றிருக்கிறோமானால், அதற்கே உரிய பெரும் பொறுப்பை நமக்கு கொண்டுவருகிறது. நாம் அதற்கு உண்மையுள்ளவர்களாக இருப்பதை நிரூபிப்போமா? அவருடைய அற்புதமான இரட்சிப்பின் செய்தி, அவருடைய மகிமையின் திட்டம், அதன் காலங்கள் மற்றும் வேளைகளின் அறிவை நமக்கு அருளினதில், நம்முடைய தேவனுக்கு அவருடைய பரிவிரக்கத்திற்கு நம்முடைய ஆழ்ந்த பாராட்டுக்களை நாம் அவருக்குக் காண்பிப்போமா?

கர்த்தருடைய ஆவி இப்போது அவருடைய பிள்ளைகளில் செயல்படுவதற்கும், எரேமியா தீர்க்கதரிசி மற்றும் பிற பரிசுத்த தீர்க்கதரிசிகளின் நாட்களில் அதன் செயல்பாட்டிற்கும் இடையே ஒரு வித்தியாசம் உள்ளது. யூத யுகத்தின்போது பரிசுத்த ஆவி, தேவ ஊழியர்கள் மற்றும்அவருடைய வாயாக இருந்தவர்கள்மீது இயந்திரத்தனமான முறையில் செயல்பட்டது. இப்போதோ கர்த்தருடைய ஜனங்கள், அவருடைய எழுதப்பட்ட வார்த்தையில் அவருடைய செய்தி மற்றும் ஆவியில் ஜெநிப்பித்தல் என இரண்டையும் பெற்றிருக்கிறார்கள். இது கடந்த காலங்களில் அவருடைய ஜனங்களுக்குச் சாத்தியமற்றதாக இருந்த ஆவிக்குரிய புரிதலை நமக்கு விசேஷமாக அளிக்கிறது. தேவனுடைய மறைபொருள்கள் இப்போது அவருடைய உண்மையுள்ள பிள்ளைகளான ஜாமக்காரர்களுக்கு வெளியாக்கப்பட்டுள்ளன. மேலும் “தேவனுடைய ஆழங்களைப்” பற்றின தெளிவான புரிதல் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. அவற்றில் சில அம்சங்கள், கர்த்தருடைய பரிசுத்தவான்களில் மிகவும் உண்மையுள்ளவர்களுக்கும் கூட தற்காலம் வரை ஒருபோதும் வெளிப்படுத்தப்படவில்லை – 1தெச 5:1–6.

### “பகல் சமீபமாயிற்று!”

கடந்தகாலங்களில் கர்த்தருடைய ஊழியர்களைப் பற்றி எழுதப்பட்ட விஷயங்கள், “உலகத்தின் முடிவுக் காலத்திலுள்ள நமக்கு” எச்சரிப்புண்டாக்கும்படிக்கும், அறிவுறுத்தலுக்காகவும் மற்றும் ஆறுதலுக்காகவும் எழுதப்பட்டவை என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்(1கொரிந் 10:11). இவை அனைத்தையும் பார்க்கும்போது, மிகவும் பிரியமானவர்களே, “நாம் எப்பேர்ப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்!”(2பேதுரு3:11). நம்மிடம் சொல்லப்பட்ட வார்த்தைக்கு நாம் எவ்வளவு அக்கறையுடன், எவ்வளவு அதீத சிரத்தையுடன் செவிசாய்க்க வேண்டும்! இக்காலத்துக்கே உரிய நமது கர்த்தருடைய செய்தியை அறிவிப்பதில் உண்மையுள்ளவர்களாக இருப்போமாக. மற்றவர்கள் கேட்கிறார்களோ அல்லது கேட்கவில்லையோ – நம்முடைய உண்மைத்தன்மை நமக்குத் தயவையோ அல்லது உலகம் மற்றும் பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலுக்குத் தயவின்மையையோ கொண்டுவந்தாலும் சரி, அவர் நம் வாயில் வைத்த வார்த்தைகளை அறிவித்துக்கொண்டே இருப்போமாக. அவருடைய வார்த்தையைச் சாந்தத்துடனும் அன்புடனும் கூறுவோமாக. முடிவுகளை நமது மாபெரும் பிரதான அறுவடையாளரிடமே விட்டுவிடுவோமாக. “பகல் சமீபமாயிற்று!”.

“நமது மகிமையின் இராஜா தமக்குச் சொந்தமானதிலே வருகிறாரே!

மனித நாவோ, பேனாவோ இப்பேர்ப்பட்ட மகிமையை வெளிப்படுத்த இயலுமோ?

பூமியிலிருந்தும் பரந்த ஆகாயத்தினூடேயும் நம் ஆனந்த துதிகள் ஒலிக்கட்டுமே!

ஓ! பரமனின் பரிசுத்தவான்களே, அந்த அற்புதமான கதையைத் தெரிவியுங்களே!

“அவர் இப்போது ஆள வந்திருக்கிறாரே, என்னே சந்தோஷத்தின் ஐசுவரியம்!

உலகத்தார் அனைவருக்குமே, ஒப்பற்ற உம் நாமம் அறிக்கையிடப்படுகிறதே!

ஓ! தேவ மைந்தனே, நாங்கள் உமது மகிமையை தொனிக்கிறோமே.

நிலமும் கடலும் மீதே – உமது வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதமான ஆளுகையை!

------------

**R5490**

# பெரிய மேய்ப்பனும் அவரது ஆடுகளும்

## THE GREAT SHEPHERD AND HIS SHEEP

**திறவுகோல் வசனம் : சங்கீதம் 23:1**

“கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்”

கர்த்தர் என்று பழைய ஏற்பாடு முழுவதும் வழங்கப்பட்டுள்ள வார்த்தை எபிரேய மொழியில் யேகோவா, ஆதலால் பரலோகப்பிதாவுக்கே இது பொருந்துகிறது, பரலோக குமாரனுக்கல்ல. மற்ற வேத வசனங்களைப் போலவே நம் திறவுகோல் வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள கருத்து, பெரிய மேய்ப்பன் தம் குமாரனை ஆடுகளுக்கு உடன் மேய்ப்பராக நியமித்திருக்கிறார் என்றும், குமாரனும் உடன் மேய்ப்பர்களை அவருக்குக் கீழ்ப்பட்டவர்களாக சபையில் நியமித்திருக்கிறார் என்றும் கூறுகிறது. மேய்க்கும் வேலையானது உலகிற்கு செய்யப்படவில்லை. பெரிய உடன்–மேய்ப்பன், வெள்ளாடுகளுக்கோ அல்லது ஓநாய்களுக்கோ மேய்க்கும் பணியைச் செய்யவில்லை. செம்மறிஆடுகளுக்கு மட்டுமே அவர் மேய்ப்பன் பணியைச் செய்கிறார். தேவனுடைய மந்தையிடத்தில் விசேஷ கவனம் செலுத்துகிறார். சங்கீதக்காரன் கூறுவதுபோல், பெரிய மேய்ப்பன் தமது ஆடுகளின் நலன்களை மேற்பார்வையிட்டு, அவைகளுக்குத் தேவையானவற்றை ஏற்பாடு செய்கிறார். பசும்புல் மேய்ச்சலுக்கு அவற்றைக் கூட்டிச் சேர்க்கிறார். ஓநாய்களிடமிருந்தும், மற்ற பசிவெறியுடைய கொடிய மிருகங்களிடமிருந்தும் அவைகளைப் பாதுகாக்கிறார்.

இந்த செம்மறியாடுகள் யார் ? என்று வினவுவோமானால், உண்மையில், யூத தேசமே ஆதியில் இந்த மந்தையாக உருவாக்கப்பட்டது என்பதற்கான நல்ல சாட்சியங்களை வேதவசனம் நமக்குத் தருகிறதை நாம் காண்கிறோம். இதன்படி, தாவீது ராஜாவும் தம்மை ஒரு ஆடாக அடையாளம் கண்டுகொண்டார். மற்ற மனுக்குலத்தாரைக் காட்டிலும் சிறந்தவர்களாக இருந்ததால் இஸ்ரயேலை கர்த்தர் தெரிந்துகொள்ளாமல், முற்பிதாவாகிய ஆபிரகாமின் நிமித்தமாக தேவன் அந்த ஜனங்களுக்கு விதிவிலக்கு அளித்து, அவர் நிமித்தமாகவே இஸ்ரயேலின் மேய்ப்பராக ஆனார். தேவனிடத்திலான மாபெரும் விசுவாசத்தினிமித்தமும், மிகவும் கடினமான பரீட்சைகளிலும் அவரது பூரண கீழ்ப்படிதலைக் காண்பித்ததாலும், அவரது சந்ததியை பூமியின் எல்லா ஜனங்களுக்கும் மேலாக விசித்திரமான ஜனமாக உயர்த்தப்போவதாக கர்த்தர் வாக்களித்தார். அவர்களுடைய நடவடிக்கைகளில் ஒரு குறிப்பிட்ட அக்கறை காண்பித்து, அதன்முடிவில், மற்ற எல்லா தேசங்களையும் ஆசீர்வதிக்கும் பணியில் அவர்களை உபயோகித்து ஆசீர்வதிப்பதாக வாக்களித்தார். இவ்வாறு தேவன் எபிரேயர்களை தம் தெரிந்துகொண்ட ஜனமாக்கினார். அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்ததற்கேற்ப அவர்களை அவர் ஆசீர்வதித்தார், அவரைவிட்டு விலகிச் செல்லும்போதெல்லாம், அவர்களை சிட்சித்து, அவருடைய பராமரிப்பின்கீழ் அவர்களைக் கொண்டுவந்தார்.

ஆபிரகாமுக்கு மற்றொரு வித்தாகிய ஆவிக்குரிய வித்து இருக்க வேண்டியதாயிருந்தது. அவர்கள் மாம்சீகவித்தின்மீது ஆளுகை செய்து, அந்த வித்தின்மூலமாக, எல்லா தேசங்களையும், இனங்களையும் ஆசீர்வதிக்கவேண்டும். ஆகவே இவ்வசனத்தின் விசேஷ பயன்பாடு ஆவிக்குரிய இஸ்ரயேலர்மீது இருப்பதையும், தேவனுடைய வாக்குத்தத்தங்களில் பிரதானமானவை அனைத்தும் அவர்களுக்கே உரியதாயிருந்ததையும் நாம் புரிந்துகொள்கிறோம். சுபாவ இஸ்ரயேலர் மாம்சத்தின்படி ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தனர். ஆனால் ஆபிரகாமின் ஆவிக்குரிய பிள்ளைகளோ, பரிசுத்தஆவியினால் புதிய சுபாவத்தில், அதாவது, ஆவிக்குரிய சுபாவத்தில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாயுள்ளனர். இதனால் சுபாவ இஸ்ரயேலரின் நடவடிக்கைகளில் கர்த்தர் அக்கறை கொண்டிருந்தார், இன்னும் பராமரிக்கிறார், குறிப்பாக, ஆவிக்குரிய இஸ்ரயேலரின் நடவடிக்கைகளிலோ, இன்னும் அதிக குறிப்பிடத்தக்க அக்கறை காண்பிக்கிறார்.

ஆகவே தீர்க்கதரிசன நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும்பொழுது, இந்த திறவுகோல் வசனத்தைப் பேசுபவர், முதன்மையாக கர்த்தராகிய இயேசுவையே குறிப்பிடுவதை நாம் புரிந்துகொள்கிறோம். மேலும் இந்த சுவிசேஷயுகம் முழுவதும் அவரோடு பிரதிஷ்டை செய்த பின்னடியார்கள், அவருடைய சரீரத்தின் அங்கங்களாக இருந்து, இவ்வசனத்தைப் பேசுபவருக்குள் குறிப்பிடப்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் இவ்வார்த்தைகளை பயன்படுத்தும் சிலாக்கியம் பெற்றிருக்கிறார்கள். “யேகோவா என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்” –சங்23:1–3.

### ஓநாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்

இந்த 23ம் சங்கீதத்தில், ஆடுகளுக்கும் ஓநாய்களுக்குமிடையிலான ஒரு வேறுபாடு சுட்டிக்காட்டப்படுகிறது. உலகம் வலிமையானதாக கருதப்படுவதை விரும்புகிறது, தங்களையும் தங்கள் உரிமைகளையும் பாதுகாக்கமுடியும் என்கிறது. அவர்களுடைய கேடகங்களில் ஒரு செம்மறிஆடு சித்தரிக்கப்படுவதை நாம் பார்க்கமுடியாது. சிங்கங்களை நாம் பார்க்கிறோம்; கழுகுகளின் விரிந்த இறக்கைகள், அதன் கூர்மையான நகங்கள் மற்றும் அதன் அலகை நாம் கண்கிறோம். பெரிய பல்லி வகைகளையும் (Dragon), கரடி, சர்ப்பங்களையும் நாம் காண்கிறோம். இவை அனைத்தும் கொடூரம், இரைவேட்டை, தந்திரம், வெற்றியடையும்

வேட்கை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகின்றன. நம் கர்த்தர், சிங்கம் கழுகு கரடி போன்ற பலமானதும் கடுமையானதுமான தேசங்களைக் கடந்துபோய், இவைகளிலிருந்து முற்றிலும் தனித்துவமாயிருக்கும் ஒரு புதிய தேசத்தை அழைத்திருக்கிறார்.

செம்மறி ஆட்டின் மனப்பான்மையை உடையவராயிருந்து, அவருடைய மந்தைக்குள் வந்துசேரும் பேராவலுடையோராய் இருக்கிற, எண்ணிக்கையில் சிலரை, தேவன் இந்ததேசத்தின் அங்கங்களாக இருக்க தெரிந்துகொண்டிருக்கிறார். இவர்களுக்கு அந்த மந்தைக்குள் நுழைய ஒரு குறிப்பிட்ட வழியை அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். அவரது மந்தையில் கரடிகளோ புலிகளோ ஓநாய்களோ, தீங்கிழைகிழைக்கின்ற பறவைகளோ இல்லை. தேவன் அப்படிப்பட்டவைகளை ஏற்றுக்கொள்வதில்லை. அவருடைய ஆடுகளை அவர் பராமரிக்கிறதுபோல, அவைகள் உணவூட்டப்படுவதும், அக்கறை காட்டப்படுவதுமில்லை. அந்த செம்மறி ஆடுகளுக்கு மட்டுமே அவர் மேய்ப்பராயிருக்கிறார்.

எனவே இந்த அழகான சங்கீதத்தின் வாக்குத்தத்தத்தை நாம் உரிமைகோருவோமானால், நாம் செம்மறி ஆட்டின் மனப்பான்மையை உடையோராய் இருப்பதையும், உண்மை மேய்ப்பரால் நடத்தப்பட விரும்புவதையும் நாம் உறுதிப்படுத்தவேண்டும். ஒரேயொரு மேய்ப்பர் மட்டுமே இருக்கிறார், அவர் நம் நலன்கள்மீது அக்கறை காண்பிக்க போதுமானவராய் இருப்பதையும், நம்மை பாதுகாப்பாக அவரிடம் ஒப்படைக்கமுடியும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அந்நிய மேய்ப்பன் ஆடுகளை வழிதவறச் செய்வான், அவைகளை சிரமங்களுக்குள்ளும், அபாயத்துக்குள்ளும், பேரழிவுக்குள்ளும் நடத்துவான். இதன் காரணமாக, மேய்ப்பனின் உடையை அணிந்திருக்கிற எல்லாரையும் நாம் நம்பக்கூடாது.

### மென்மையான மேய்ப்பனின் பராமரிப்பு

மாபெரும் பெரிய மேய்ப்பன், மந்தைக்கு திரும்பிவர ஏக்கமாயிருக்கிற வழி தவறின ஆடுகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறார். நமக்காக மரித்தவரை உடன் மேய்ப்பராக அவர் நியமித்திருப்பதால், எவனை விழுங்கலாமோ என்று சுற்றித்திரிகிற கர்ச்சிக்கும் சிங்கமாகிய தீயவனிடமிருந்து , எல்லா ஆடுகளையும் முழுமையாக விடுவிப்பார். நம் இரக்கமிகுந்த இரட்சகர், மகிமையின் பிரகாரங்களை விட்டுவிட்டு, பூமிக்கு இறங்கிவந்தார். 33ஆண்டுகள் அவர் இந்த கண்ணீர்களின் பள்ளத்தாக்கை, களைப்படைந்த கால்களில் கடந்துசென்றார். அவர் தரித்திரரிடமும் தாழ்வுற்றோரிடமும் ஒன்று கலந்தார், பாவிகளோடும் வருத்தப்படுவாருடனும் சேர்ந்து கண்ணீர்விட்டார். அவருக்கு தலைசாய்க்கவும் இடமில்லாதிருந்தது. தம்மைச்சுற்றிலும் வாழ்ந்த ஜனங்களின் துயரங்களையும் நோய்களையும் சுமந்துகொண்டார். அவர் துக்கப்படுபவரும் பாடனுபவித்தவருமாயிருந்தார், அவமானம் மற்றும் நிந்தையை அவர் சகித்தார். இவையனைத்தும் மரணபரியந்தம் தொடர்ந்தது. எதற்காக ? "காணாமற்போன ஆட்டை" அவர் மீட்பதற்காகவே. அவருடைய பூமிக்குரிய யாத்திரையின்போது, அலைந்து திரிகிற ஆட்டை கண்டடைந்து, தேவனுடைய மந்தைக்குள் திரும்பக் கொண்டுவருவதற்காக, பரலோகத்தின் ஒளிரும் சேனைகளின் ஆசீர்வதிக்கப்பட்ட ஐக்கியத்தை அவர் விட்டுவிடவேண்டியிருந்தது.

ஆடுகள் தங்கும் பட்டியில்

99 ஆடுகள் பாதுகாப்பாயிருந்தன

ஒன்றோ மலைகளுக்கப்பால் இருந்தது

இருளுக்கும் குளிருக்கும் வெகுதொலைவில்

மலைகளுக்கப்பால் – காடுகளிலும் பாதுகாப்பற்ற இடங்களிலும்

மேய்ப்பனின் மென்மையான பராமரிப்பிலிருந்து விலகியிருந்தது

............

கடக்கப்பட்ட தண்ணீர்களின் ஆழம் எவ்வளவு என்று

மீட்கப்பட்டோரில் ஒருவனும் ஒருபோதும் அறியவில்லை

கர்த்தர் கடந்துசென்ற அந்த இரவு எவ்வளவு இருளானது என்றும் அறியார்;

இங்கே தானே காணாமற்போன ஆட்டை அவர் கண்டுபிடித்தார்

நோயுற்று உதவியற்று மரிக்கத் தயார் நிலையில்

பாலைவனத்துக்கு வெளியே அதன் கூக்குரலை அவர் கேட்டார்.

..........

அப்போது மலைகளினூடே இடி முழக்கத்தின் பிளவு

செங்குத்தான பாறைக்கு மேலே

பரலோகத்தின் வாசல்களை நோக்கி மகிழ்ச்சியின் சத்தமொன்று எழும்பிற்று

"களிகூறுங்கள்! என் ஆட்டை நான் கண்டுபிடித்தேன்!

சிங்காசனத்தைச் சுற்றிலுமிருந்து தேவதூதர்கள் எதிரொலித்தனர்,

"மகிழ்ச்சியாயிருங்கள்! கர்த்தர் தம்முடையதை திரும்பக் கொண்டுவருகிறார்"

இப்படிப்பட்ட மேய்ப்பனுக்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளோராய் இருக்கவேண்டும்! அவருடைய புகழை எப்படி நம்மால் நிறைவாக எடுத்துரைக்கமுடியும்! தேவனிடத்தில் நம்மை மீட்கும்படிக்கு, "கர்த்தர் கடந்துசென்ற இரவின் இருள் எத்தகையது" என்று உண்மையாகவே திரைக்கு இப்புறமிருந்து நம்மால் ஒருபோதும் அறியமுடியாது. நாம் அவருடைய ஆடுகளாகின அந்நேரத்திலிருந்து நம் எல்லா நலன்களிலும் அவர் மென்மையாக பராமரித்து, நம் பாதையில் இருக்கும் ஆபத்தான கண்ணிகளிலிருந்தும், ஒவ்வொரு எதிரியிடமிருந்தும் நம்மைக் காப்பாற்றுகிறார்.

### வழி தப்பின ஆடுகளாக மனுக்குலம்

ஆதாமின் சந்ததி அனைத்தும், "இந்த காணாமற்போன ஆடாக இருக்கிறது. மாபெரும் பரலோக மேய்ப்பன் தற்கால யுகத்தின்போது, தம் ஆடுகளை

விரைவில் திரைக்கு அப்பால் மந்தைக்குள் சேர்த்தபிறகு, பொதுவான உலகம் அவருடைய மற்றொரு ஆட்டு மந்தையாகியிருப்பர். இதைக் குறித்தே நம் ஆண்டவர்; “இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறு ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும்”(யோவா10:16) என்றார். இறுதியில், தேவனுடைய சாயலைப்பெற்ற அனைவரும் கர்த்தருடைய ஆடுகளாக எண்ணப்படுவதால் மகிழ்ச்சியடைவார்கள். மனிதருக்கான தேவனுடைய மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தை அவர்கள் புரிந்துகொண்டு, முழு மனுக்குலமும் அவர் மூலமாய் பிழைக்கும்படிக்கு, அவர்களுக்காக மரிப்பதற்கு தம் குமாரனை அனுப்பின பெரிய மேய்ப்பரால் உலகிற்கு அருளப்பட்ட அற்புதமான ஆசீர்வாதத்தை மதித்துணருவார்கள்.

கிருபையின் ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டு, கர்த்தருடைய இராஜ்யத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு கீழ்ப்படிந்து, தங்களால் சிறந்ததைச் செய்கிற அனைவரும் செம்மறி ஆட்டு மந்தைக்குள் கொண்டுவரப்படுவார்கள். கீழ்ப்படியும் அளவுக்கேற்ப, அவர்கள் சீரழிவிலிருந்து பூரணத்துக்கு உயர்த்தப்படுவார்கள். இவ்வாறாக, அடுத்த யுகத்தில் ஆடுகளாக இருப்பவர்கள்மீது அக்கறை காண்பிப்பதால், எதுவும் அவைகளுக்கு தீங்கு விளைவிக்காது, அவைகளை காயப்படுத்தாது. அவைகளுக்கு தீங்கு விளைவிக்கும்படி எதையும் கர்த்தர் அனுமதிப்பதில்லை. அவர்கள் பசும்புல் மேய்ச்சலாலும், தூய்மையான , புத்துணர்வூட்டும் சத்தியமாகிய தண்ணீராலும் போஷிக்கப்படுவார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல பாரம்பரியத்தை அடைந்திருப்பார்கள்.

ஆனால் தற்கால யுகத்திலிருக்கும் ஆடுகள் உயர்த்தப்பட்டிருந்து, வரவிருக்கிற யுகத்திலுள்ள ஆடுகளுக்கு மேய்ப்பனின் பணியை செய்வார்கள். அவர்கள் வருங்காலத்தில் செய்யவிருக்கும் மாபெரும் பணிக்கு அவர்களை தகுதிப்படுத்துவதற்காக, தற்போது வித்தியாசமான தனித்தன்மை வாய்ந்த ஒரு பயிற்சி கொடுக்கப்படுகிறது. இந்த உயர்ந்த மட்டத்திற்கு இவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து, அதற்கேற்ப கையாளப்படுகிறார்கள். இவர்கள் மாம்சத்தின்படி சில குறிப்பிட்ட சோதனைகளையும் இன்னல்களையும் அடையவேண்டும் என்பதே இதன் பொருளாகும். இந்த கடினமான அனுபவங்கள் தங்கள் பாதைக்கு அவசியம் என்பதை இந்த ஆடுகள் புரிந்துகொள்ளுமானால், அவைகளால் சந்தோஷமாயிருக்க முடியும். மேய்ப்பன்பேரில் அவைகள் முழு பற்றுறுதி வைத்திருக்குமானால், அவர் அவைகளுக்கு தேவையற்ற அனுபவங்களை அனுமதிக்க மாட்டார் என்று அவை அறிந்துகொள்ளும், இதனால் எதுவும் அவைகளுக்கு காயமேற்படுத்தாது. அவர் அவைகளுடைய நடவடிக்கைகளை மேலாதிக்கம் செய்து, அவைகளுடைய நன்மைக்கேதுவாக எல்லாவற்றையும் நடப்பிப்பார். ஏனெனில் அவைகள் அவரை நேசிக்கின்றன, அவைகள் தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளே மிக உயர்ந்த தர நிலையிலுள்ள ஆடுகளாகிய சிறுமந்தை. இவைகள் மனுக்குலத்தின் சிறு பகுதியை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். ஊக்கம், பணிவு, நீதியை நேசித்தல் போன்ற விசேஷ தன்மைகளை இவைகள் பெற்றிருக்கும். தேவனுடைய மந்தைக்குள் வந்திருக்கின்ற இவைகள், மாபெரும் மேய்ப்பன் மீது பற்றுறுதி கொள்வதற்கு எல்லா காரணமும் உள்ளன. ஆதலால், நம் மீதான அவருடைய நிலையான அக்கறையை, நம் ஆவிக்குரிய நலன்கள்மீதே அவருடைய மிக உயர்ந்த ஆர்வம் இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளவேண்டும். நல்ல ஆடுகளாக நாம் இருப்போமாக! மந்தைக்கு வெளியே வலதுகரத்தின் பக்கமோ, இடது பக்கமோ அலைந்து திரியாதிருப்போமாக! பசும்புல் மேய்ச்சல் மற்றும் தூய்மையான தண்ணீர்களுக்கப்பால் ஈர்க்கப்பட்டு, வழியிலுள்ள முட்புதர்களுக்குள்ளும், சில விஷ செடிகளுக்குள்ளும் மேயாதிருப்போமாக! அல்லது மனித யூதங்கள், மனிதனுடைய வஞ்சிக்கும் கோட்பாடுகளாகிய, சேற்று நீரை, மாசுபட்ட நீரைக் குடிக்காதிருப்போமாக.

## ஆடுகளின் குணாதிசயங்கள்

“என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன் அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது”(யோவா10:27) என்கிறார் நம்ஆண்டவர். கர்த்தருடைய உண்மை செம்மறியாடாக நாம் இருப்போமானால், அவருடைய சத்தத்தை நாம் அறிவோம். நாம் தவறுசெய்யமாட்டோம். அந்நியனை நாம் பின்தொடர மாட்டோம், மாறாக, அவனைவிட்டு ஓடிவிடுவோம். ஏனெனில் அந்நியருடைய சத்தத்தை நாம் அறிந்திருப்பதில்லை(யோவா 10:5). பரலோகப் பிதா தற்போது தேடுகிற குணாதிசயங்களின் தன்மைக்கு மிக குறிப்பிடத்தக்கதும், பொருத்தமான சின்னமாக, “என் மேய்ச்சலின் ஆடுகள்” என்று தம் ஜனத்தை எரேமியா 23:1இல் குறிப்பிடுகிறார். செம்மறியாட்டின் விசேஷ குணாதிசயங்களாக சாந்தம், பணிவு, தன்னம்பிக்கையில் குறைவுபடுதல், தான் நம்பியிருக்கிற மேய்ப்பனுக்கு கீழ்ப்படிதல் போன்றவை உள்ளன. மேய்ப்பனுடைய சத்தத்தின் மெல்லிய ஓசையையும் உண்மை செம்மறியாடு தீவிரமாய் கவனிக்கும். அவருடைய சத்தத்துக்கு உடனடியாக அது பதிலளிக்கும்; அவருடைய வழிகாட்டுதலை அது கவனித்திருக்கும். நம் பரலோக மேய்ப்பனும் வழிகாட்டியுமானவரிடத்தில் எப்பொழுதும் நெருக்கமாயிருந்து, அவருடைய அன்பின் அக்கறை மற்றும் விழித்திருக்கும் கண்களின்கீழ் குடியிருந்து, மிகவும் விரும்பத்தக்க இந்த குணாதிசயத்தின் எல்லாப் பண்புகளையும் வெளிப்படுத்துவோமாக! கிறிஸ்துவுக்குள் இவ்வாறு தங்கி வாழ்வோர் பாதுகாப்பாயுள்ளனர்.

“அவரை நம்பியிருப்பதால்,அவைகள் வழி மாறுவதில்லை;
அவைகள் ஒருபோதும் தங்கள் வழியை இழப்பதில்லை”

---------